Registered No. M. 329.

Vol. I. **January 1903.** **No. 9.**

THE

SUGUNA SUNDARAM.

A MONTHLY TAMIL JOURNAL.

சுகுணசுந்தரம்.

(மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.)

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாராநெறி"—குறள்.

CONTENTS.

1. The Human Life, Its End and Aim by S. Muthu Aiyar, B.A. ... 194
2. Atheism and Its Confutation by Ganesa Ariar 200
3. Patriotism 205
4. The Town of Delhi and the Coronation of Emperor Edward VII 208
5. Demonstrations at Turaiyur for the Emperor Edward VII ... 212
6. General News 215

அட்டவணை.

1. மானிடப்பிறப்பின் அருமையும், அதனாலடைதற்குரிய பயனும் 194
2. சா (चा) ர்வாக மதமும், அதன் கண்டனமும் (கணேச ஆரியர் ... 200
3. சுதேசாபிமானம் ... 205
4. டில்லிமா நகரும், அதில் நடந்த நமது 7-வது எட்வர்ட் அரசரின் மகுடாபிஷேகச் சிறப்பும் ... 208
5. துறையூரில் 7-வது எட்வர்ட் சக்கிரவர்த்தியாருக்காக நிகழ்ந்த முடிசூட்டு வைபவம் ... 212
6. சமாசாரக் குறிப்புக்கள். ... 215

Published by
T. S. SUBBARAMA AIYER, *Inamdhar*,
TURAIYUR.

All Rights Reserved.

Printed at the "Minerva" Press, by Thompson & Co., Broadway, Madras.

கனவான்களே,

ஆரியமு மாங்கிலமு மாசறு தென்னாட்டிலகு
சீரிய நந்தமிழைச் சீரியே—பூரியரின்
வந்து * நலியவய மிழந்ததைத் தமிழீர்
முந்துமின் காப்பமுயன்று.

இத்தேயத்தில் சிருட்டிகாலந்தொடங்கிப் பெருமை பெற்று வழங்கிவரும் நமது தமிழ்ப்பாஷை சிவபெருமான் முருகக்கடவுள் முதலிய தேவர்களாலாராயப்படும் தெய்வீகமுடையதாயும், அகத்தியமுனிவர் அதங்கோட்டாசான் முதலிய இருடிகட் கினிமைதோன்றுஞ் சொன்னயமுடையதாயும், பொய்யடிமையில்லாத புலவராதி நல்லறிவாளர் வினைத்தாடிப் போதுபோக்க விரும்பப்பட்டதாயும், சேரசோழபாண்டியரென்னுந் திருந்தலர்கடந்த பெருந்தகையரசகோளரிகளாற் கண்ணையிமைகாக்குமாறுபோற்பிரிந்து காக்கப்படுவதாயு மிருந்ததற்குக் கால வேறுபாட்டால் ஆரியமோர்பாலும் ஆங்கில மோர்பாலுமாய் நின்று நெருக்குதலின், அவைகட்கிவ்விடத்தைத் தத்தம்பண்ணிவிட்டுப் புறம்போகத் தலைப்படுகின்றது. சிலகாலத்துக்குமுன் ஐதராலிமுதலிய மகம்மதியவரசர்களால், நமதுநாட்டார் தங்கள் சுதந்திரங்கெட்டுச் செல்வங்களையும், புராதன தமிழ் நூல்களாகிய கல்விகளையுமிழந்தார்போல நமது தமிழ்பாஷையும் வேற்றுநிலத்துப் பாஷைகளாற்றனது சொல்லின்பம் பொருளின்பங்களை யிழக்கப்போவதாயிருக்கின்றது. புராதன தமிழ் நூல்களில் சில அம்மகம்மதியவரசர்கள் கண்கட்குப் புலப்படாமல் எஞ்சியிருந்தவைகள் தற்காலத்தில் இறத்தற்கேதுவாய் நோய்கொண்டிருப்பவைகளை கண்ணுற்று மருத்துவனைப்போல் சிகிச்சை செய்துவரும் நமது கும்பகோணம் காலேஜ் தமிழ்பண்டிதர் பிரம்மஸ்ரீ உ, வே. சாமிநாதய்யர் அவர்கட்குக் கடவுள் தீர்க்காயுளையும், சரீர திடத்தையும் அருளுமாறு அக்கடவுளைத் துதிபுரிவதுடன் அவ்வய்யரவர்கள் செய்யும் நன்றியை மறவாத கடமை பூண்டிருப்போமாக.

நமது காருண்ணிய கவர்ன்மெண்டார் நம்மை தீயவரசரின் சிலுகுக்கிலக்காகாமல் பாதுகாப்பதுபோல நமது அரிய தமிழ்பாஷையையும் அக்கவர்ன்மெண்டார் தங்கள் கருணை நிறம்பிய கடைக்கண்களாற் பார்த்தளிக்குங்காறு மித்தமிழை இயன்றவரை நாம் அபிமானிக்கக் கடமைப்பட்டிருத்தலின் இதற்குச்சாதகமாயுள்ளவை தமிழ்ப்பத்திரிகைகளேயாம்.

இப்போது வழங்கிவரும் தமிழ்ப்பத்திரிகைகளுள் இச்சுகுணசுந்தரமும் ஒன்றாய் 1902௵ மே௴ முதல் துவக்கி நடத்தப்பட்டு வருகிறது. இது இந்நாட்டில் நிலைபெற்று உலாவுதற்பொருட்டுத் தத்தமக்கியன்ற நன்கொடை யளிக்கவும் இப்பத்திரிகைகளைத் தருவித்து அபிருசியுடன் வாசிக்கவும், இதன்கண்ணுள்ள விஷயங்களின் உண்மைகளைப் பிறருக்கு எடுத்துக்கூறவும், புத்திமான்களாகிய கனதனவான்களை வேண்டுகின்றோம். இப்பத்திரிகையுடனனுப்பப்படும் "நன்சொடை" (Donation) பாரத்தில் அவரவர்கள் அளிக்கப்படும் நன்கொடை (Donation) விவரத்தை எழுதியனுப்பப்படுமாகில் அதனையிப்பத்திரிகையின் நிலைபேறுக்குச்சாதகமாய் நன்றியறிதலுடன் பெற்றுக்கொள்ளப்படுவதோடு அக்கொடையாளிகளை இப்பத்திரிகையிலும் பிரசித்தஞ் செய்யப்படும்.

சுகுணசுந்தரம் ஆபீசு, துறையூர். முசிரிதாலூகா.

---

* நலிதலாவது தமிழின்கண் அவ்வச்சொற்களை விரவிவழங்குதல்.

சுகுண சுந்தரம்.

(மாதந்தோறும் பிரசுரிக்கப்படுந் தமிழ்ப்பத்திரிகை.)

வால்யம் 1.] 1903ஹ ஜனவரிமீ. [நே. 9

RATES OF SUBSCRIPTION.

Yearly including Postage	Rs.	3	0	0
Half Yearly	,, ,,	1	12	0
Single Copy	,, ,,	0	5	0
Back numbers	,, ,,	0	6	0

Foreign Subscriptions 6 s. Per Annum.

Subscriptions begin with 1st May of each year.

A discount of 8 as. and 4 as. respectively will be allowed to regular annual and half yearly Subscribers, and a grace of two months to the former and one month to the latter Subscribers will be granted for the prepayment of Subscriptions, to entile them to the discount aforesaid.

A copy will be sent free to those who contribute articles to the journal.

The Editor will not undertake to publish any matter other than he deems worth publishing. Contributors are requested to write their names and address legibly.

The Managing Proprietor reserves to himself the right of republishing all matters that appear in this journal. All correspondents are requested to enclose, postage stamps to ensure a reply by quoting the register number.

Donations will be thankfully received.

Missing numbers cannot be replaced without payment if not brought to notice then and there.

சந்தாவிவரம்.

ஹ 1 க்குதாபாற்கூலிஉள்படரூ.			3- 0-0
ஆறுமாதத்திற்கு	,,	,,	1-12-0
பிரதி ஒன்றுக்கு	,,	,,	0- 5-0
பழயபிரதி	,,	,,	0- 6-0

இப்பத்திரிகைக்கு மேமீ முதல் சந்தாக் கணக்கு வைக்கப்படும், மே மாதத்துக்குள் சந்தாத் தொகையை முன்பணமாய்ச் செலுத்துபவர்களுக்கு வருஷச் சந்தாவில் அணு 8-ம், ஆறுமாதச் சந்தாவில் அணு 4-ம், தள்ளிக்கொடுக்கப்படும்; வருஷந்தோறும் கிரமமாய்ச் சந்தா செலுத்துபவர்களுக்கு இரண்டுமாதத் தவணையும், ஆறுமாதத்திற்கு ஒருதடவை செலுத்துபவர்களுக்கு ஒருமாதத் தவணையுங் கொடுக்கப்படும். விஷயங்களெழுதிக் கொடுக்கும் பண்டிதர்களுக்கு இனமாக ஒரு புத்தகம் அனுப்பிவரப்படும்.

அறிவிப்பு:—இந்தப்பத்திரிகைக்குப்பண்டிதர்கள் எழுதிக்கொடுக்கும் விஷயங்கள் தகுந்த யோக்யதையுடையவைகளா யிருந்தாலன்றி பிரசுரிக்கப்படமாட்டா ; விஷயமெழுதிக் கொடுப்பவர் அதில் தங்கள் கையொப்பமும், விலாஸமுந் தெளிவாயெழுதியனுப்பவேண்டும்.

☞ புத்தகரூபமாய் வெளிப்படுவதற்குரிய விஷயங்களை, எழுதி யனுப்பினோர் அனுமதியை எதிர்பாராமலே அச்சிடுவதற்கு எமக்கு சுதந்திரமுண்டு.

நன்கொடைகளை வந்தனங்களுடன் பெற்றுக்கொள்ளப்படும்.

தவரிப்போகும் நெம்பர்கள் அப்போதைக்கப்போது நம்முடைய நோட்டீசுக்குக் கொண்டுவந்தாலன்றி, பணம் செலுத்தாமல் மறுபடி அனுப்பப்பட மாட்டா.

மானேஜிங் ப்ரொப்ரைட்டர்,
சுகண சுந்தரம் ஆபீசு, துறையூர்.

மானிடப்பிறப்பின் அருமையும், அதனாலடை தற்குரிய பயனும்.

இவ்வுலகத்தில் யாம் காணும் உயிர்க்குலங்கள் எல்லாவற்றினும் மனிதராகிய நாம் உருவிலும் அறிவிலும் தோற்றத்தினும் உயர்ந்துள்ளோமென்பதில் யாதும் சந்தேகமில்லை. இந்த மானுஷ ஜன்மத்தைப் பெறுதல் மிகவும் அருமையானதென்பதும் அறிவிற் சிறந்த பெரியோர்களுடைய கொள்கையாகும். "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்—பல் மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி"—எவ்வளவோ ஜன்மங்கள் எடுத்த பின்பு அந்தந்த ஜன்மங்களிற் செய்த சுகிர்த விசேஷத்தாலே இது பெறத்தக்கது என்பர். இகபரசாதகமான எவ்வகை பதார்த்தங்களையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல எளிதில் விளங்க வைத்துள்ள ஞானபானுவாகிய ஔவையார் இவ்விஷயத்தைச் சுட்டிச் சொல்லியிருப்பதை அறியாதவர் யாவர்?

"அரியது கேட்கின் எரிவடி வேலோய்,
அரிதரிது மானிடராதலரிது;
மானிடராயினும் கூன் குருடு செவிடு
பேடு நீக்கிப் பிறத்தலரிது
பேடுநீக்கிப் பிறந்தகாலையும்
ஞானமுங் கல்வியும் நயத்தலரிது;
ஞானமுங் கல்வியும் நயந்தகாலையும்
தானமுந் தவமும் தான் செயலரிது;
தானமுந் தவமும் தான் செய்வராயின்
வானவர் நாடு வழிதிறந்திடுமே."

அதாவது, மனுஷ்ய ஜன்மத்தைப் பெறுதல் மிகவும் அரியதென்றும் பூர்வ ஜன்ம சுகிர்தத்தினாலே அதனைப் பெற்றபோதிலும் கூன் குருடு செவிடு முதலிய உடற்குற்றம் நீங்கி நிறைந்த வடிவோடு கூடிய அரோகதிட காத்திரத்தைப் பெறுதல் அரிதென்றும், அவ்வாறு பெறுதற்கரிதாகிய தேகத்தைப் பெற்றகாலையில் அதனால் அடையவேண்டிய பயன் "இளமையிற் கல்" என்றபடித், தக்க பருவத்தே நல்லாசிரியரை அடுத்துக் கல்வியைக் கற்று ஞானத்தைப் பெறுதலென்றும், அவ்வாறு பெற்றபோதிலும், நல்வழியாற் சம்பாதித்த திரவியத்தை எளியவர்க்கீந்து உபகரித்தலும், அக்கல்வி ஞானங்களால் விளக்கமுற்ற மனத்தைப் பொறிகளின் வழியே நெறியல்லாத விஷயங்களிற் போக்காமல் நிக்கிரகித்து எப்பொருட்கும் இறைவனாகிய ஈசனது திருவடித் தாமரைகளிலே நிறுத்துதலும் அரியதென்றும், இவ்வருமையான காரியத்தைச் சாதித்துக்கொள்ள வல்லவர்கள், "வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்ந்தார்க் கியாண்டு மிடும்பையில" என்றபடி, இம்மைக்கண்ணே

இடுக்கண் நீங்கிச் சுகமும் புகழும் பெற்றிருத்தலன்றி மறுமைக்கண்ணும் போக்குவரவில்லாத சுகாதீதத்தைப் பெற்றுக் களித்திருப்பார்கள் என்றும் கூறியிருக்கின்றனர்.

இவ்வுண்மையே இன்னமும் பன்னூல்களிலும் பரக்கக் கூறப்பட்டுள்ளது. சிவஞான சித்தியார் என்னுஞ் சித்தாந்த நூலில் இவ்விஷயமாகயாது கூறுகின்றனர் பாருங்கள். அதன் பொருளைத் தேருங்கள். அவ்வழியைச் சாருங்கள்.

"அண்டசஞ் சுவேதசங்க ளுற்பிசஞ் சராயுசத்தோ
டெண்டரு நாலெண்பத்து நான்கு நூறு யிரத்தால்
உண்டு பல் யோனியெல்லா மொழித்து மானிடத் துதித்தல்
கண்டிடிற் கடலைக் கையால் நீந்தினன் காரியங்காண்.

நரர் பயில் தேசந்தன்னில் நான்மறை பயிலா நாட்டில்
விரவுத லொழிந்து தோன்றல் மிக்கபுண்ணியந்தானுகும்;
தரைதனிற் கீழைவிட்டுத் தவஞ்செய் சாதியினில் வந்து
பரசமயங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணுதே.

மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயத்
தானிடைத் தைந்துமாடு மரன்பணிக் காகவன்றே
வானிடத்த வருமண்மேல் வந்த ரன்றனை யர்ச்சிப்பர்
ஊனெடுத் துழலுமூமர் ஒன்றையு முணரா ரந்தோ

கருவினி லழிவதாயும் கழிந்திடா தழிவதாயும்
பரிணமித் தழிவதாயும் பாலனு யழிவதாயும்
தருணனு யழிவதாயும் தானரைத் தழிவதாயும்
உருவவே யழிவேயாறு வுள்ளபோ தேபாருய்ய.

ஒரு புலனுக் கரும்போதங் கொன்றிலையொன் றின்பாலும்
வருபயன் மாறிமாறி வந்திடு மெல்லா மாயும்
ஒருபொழு துணரிலுண்டா யில்லதிவ் வல்லல்வாழ்க்கை
மருள்கன வதுவும்போல மாயும்பின் மாயுமன்றே."

அதாவது: அண்டஜம், சுவேதஜம், உற்பிஜம், சராயுஜம் என்னும் நால்வகை யோனி பேதங்களையுடைய எண்பத்துநான்கு லக்ஷம் ஜீவ பேதங்களில் மற்றைப் பிறப்புகள் எல்லாவற்றையும் ஒழித்து மானிடப் பிறப்பைப் பெறுதல், எல்லையில்லாத சமுத்திரத்தை மரக்கல முதலான கருவிகளின் சாதகத்தைக்கொண்டு கடத்தல்தானும் அதிப்பிரயாசமாயிருப்ப, ஒருவன் யாதொரு சாதகமுமின்றித் தன்னிரண்டு கைகளைக் கொண்டே தேகவலிமையாலே நீந்திக் கடந்ததுபோலவும் அவ்வளவு அருமையானது. இவ்வளவருமையான மனுஷ்ய ஜன்மத்தைப்பெற்று, மனுஷ்யர் ஜன்மிக்கும் பூமிகளில் வந்து பிறந்தாலும், வேதாகம மார்க்கமில்லாத தேசத்துப் பிறவாது அவை வழங்குகின்ற தேசத்தில் உற்பவிப்பது எவ்வளவோ பூர்வஜன்ம புண்ணியத்தால் சித்திக்கக்கூடியதாகும். அதிலும் தாழ்ந்த சாதியை விட்டு வேதாதி மார்க்கிகளாய்ப்

பிறந்து, பாஷண்ட மதங்களிற் பரிசயம்பண்ணுத பாக்கியத்தைப் பெறுவது மிகவும் அரியதாகும். இத்தனை அரியதாகிய ஜன்மத்தை யெடுத்தும் அதனுல் நாம் அடையற்பாலது மனோவாக்காயங்களினுலே ஈசுவரனைப் பூஜைபண்ணி அவனருளைப் பெறுதற்கருகலாதலாக அவ்வாறுகாமல் உண்டுறங்கிக் காலங்கழிப்பராயின் அவர்கள் வாயிருந்தும் ஊமர்களை யொப்பார்கள்; அறிவிருந்தும் ஞான சூனியமாகிய விலங்குகளிலும் கடையாவார்கள். அன்றியும், இச்சரீரமானது நீர்மேலெழுத்துப்போல் நிலையற்றது. சிலர் தம் தாயாரின் கருக்குழியிலேயே இறந்துபோவார்கள். சிலர் ஜன்மிக்கும் அவசரத்தில் செத்துப் பிறப்பார்கள். சிலர் பிறந்தவுடன் அழிவார்கள். சிலர் பால்யாவஸ்தையிலேயும், சிலர் யெளவனுவஸ்தையிலும், சிலர் வார்த்தக்கிய தசையிலும் அழிந்துபோவார்கள். ஒருவரும் உலகத்தில் நிலையாயிருப்பவரில்லை. ஆதலால், சரீரமிருக்குங் காலத்திலேயே உஜ்ஜீவிக்கும் வகையைத் தேடல் வேண்டும். சாரமில்லாததும், நிலையற்றதும், சொப்பனம் போலே தோன்றிக் கெடுவதுமான இம்மாய வாழ்க்கையைச் சதமென்றெண்ணி மோசம் போகக்கூடாதென்பதாம்.

இம்மானிட வாழ்க்கையானது பெறுதற்கரியதென்பது அதன் உயர்ச்சியினுலேயே எளிதில் தெரிந்துகொள்ளக்கூடியது. இதற்கு ஆகமப் பிரமாணங்கூட வேண்டியதில்லை. அஃது அநித்தியமென்பதோ பிரத்யக்ஷப் பிரமாணத்தாலறியப்படுவது. இம்மனுஷ்ய ஜன்மத்தின் உயர்ச்சியையும் அருமையையும் ஒப்பாதவர் ஒருவருமில்லை. இது சர்வ சமயத்தாருக்கும் சம்மதமானதே. கிறிஸ்தவர்கள் இதனைச் சுட்டியே, உலகில் உள்ள எண்ணிறந்த ஜீவராசிகளில் மனுஷ்யஜாதி யொருவர்க்கு மாத்திரமே ஆன்மா உள்ளதென்றும், மற்றப் பக்ஷி மிருகாதி பிராணிகளுக்கு ஜீவனைத்தவிர நித்தியமாகிய ஆன்மா ஒன்று இல்லையென்றும், அதனுல் மனுஷ்யன் ஒருவனே இம்மை மறுமைப் பயன்களையடைதற்குரியவன் என்றும், மற்றைச் சீவராசிகளெல்லாம் மனுஷ்யனுக் குதவியாகும்படிக்கு மாத்திரமே சிருஷ்டிக்கப்பட்டவையென்றும் சாதிப்பார்கள். அன்றியும் அவர்கள் மனுஷ்யனைப்பற்றி, அவன் ஆன்மாவைப் பெற்றுள்ளதனுல் மாத்திரமே யன்று உத்கிருஷ்டனுவது: அவனது உருவமும் கடவுளது சொந்த உருவம்போலவே அமைக்கப்பட்டுள்ளது என்றும் கடவுளுக்குரிய குணங்களாகிய அருள், இரக்கம், நீதி, தூய்மை, வாய்மை முதலான குணங்கள் இம்மனிதனுக்கே உள்ளதனுலும் மானிட ஜன்மமானது மற்றெல்லாவற்றினும் உயர்ந்ததென்றும் சொல்லுவார்கள். அவர்களுள் ஒருசாரார், மனிதராகிய நாம் அப்புவியின் கண்ணே தோன்றுமுன்னே வானுலகத்தில் கடவுளது

திவ்ய சந்நிதியில் வாழ்ந்திருந்தோமென்றும், பின்னர் அங்கு நின்று இம்மண்ணுலகில் வந்து மாதாவின் வயிற்றிலுதித்தோமென்றும், குழந்தைப் பருவத்தில், இத் தெய்வீகத் தன்மை நம்மிடத்தே கொஞ்சம் ஏறக்குறையத் தொடர்ந்து தங்கியுள்ளதென்றும், வயது செல்லச் செல்ல இத்தெய்வீக சுபாவமானது, அப்பிரபஞ்சத்தின் கஷ்ட நிஷ்டூரங்களில் அடிபட்டுக் காமக்குரோதாதி குணங்கள் மேலிட்டு நாம் வருந்தி யுழலுந்தோறும் கொஞ்சங் கொஞ்சமாக நம்மைவிட்டு விலகிப்போய், முடிவில் முற்றிலும் நீங்கி விடுகின்றதென்றும் கூறுவர். இவ்வுண்மையைச் சுட்டி வோர்ட்ஸ் வர்த் (Words worth) என்னும் ஒரு இங்கிலீஷ் புலவர் பின்வருமாறு தம் காவியங்கள் ஒன்றில் கூறியிருக்கின்றனர்.

"மொழிதரும் பிறப்பிது துயின்று முன்னினைப்
பொழிதலே யாகுமால்; உற்று நம்மொடும்
அழகினிற்றோன்று ளமாகுஞ் சோதிதான்,
இழிவற மறைந்ததாமீன்னோர் பாலினே.

(இ - ள்) இப்பிறப்பானது நித்திரையை யடையுமொருவன், நனவுணர்வை யிழந்து கனவுணர்வின் கண்ணே செல்லுதல் போலாகும். நம்முடைய ஆன்மாவானது இப்போது இங்கு இவ்வுடலின்கண்ணே உதித்த காலத்து நூதனமாகச் சிருஷ்டிக்கப்பட்டதொன்றன்று. எப்படி வானத்தில் தோன்றும் நக்ஷத்திம் ஒன்று இங்கு தோன்று முன்னேமே இன்னேரிடத்தில் அத்தமித்து வந்ததோ அப்படியே, இவ்வான்மாவும் முன்னேரிடத்து நீங்கி பின்னர் இங்கு தோன்றியதாகும். (எ - று).

2. மற்றொரு புதத்தினில் மறைந்த வாருயிர்
அற்றமினெறிக்கொடி ங்கணேவ தாயினும்
முற்றுமே தன்து முன்னுணர்வு நீங்கியும்
வெற்றுடம்பாகியும் மேவலில்லையால்.

(இ - ள்) ஆன்மாவானது இங்கு தோன்றுவதற்கு முன்னமே பிறிதோரிடத்தில் நிலைபெற்றிருந்து, பின்பு அவ்விடத்தைவிட்டு நீங்கி நெடுந்தூரம் பிரயாணம்செய்து இங்கு வந்து உதிப்பதாயினும் அவ்விடப்பெயர்ச்சியாலும் வழிவருத்தத்தாலும் தன் முன்னிலைமையை முற்றும் மறந்துவிடுதல் இல்லை. முன்னிலைமையில் தான் பெற்றிருந்த ஒளியைபும் முற்றும் இழந்து வெற்றுடம்பாகத் தோன்றுதல் இல்லையாகும். (எ - று.)

3. தன்னதா ரிருப்பிடமாகும் தம்பிரான்
சன்னிதி யிருந்திவண் சாருங் காலையில்
மின்னிய வொளிப்பிழம் போடு மேவுமால்
அன்னது வதைத்தொடர்ந் தணேதலா லரோ.

(இ - ள்) ஆன்மாவானது எங்கிருந்து வருவதென்னில் வானுலகில் கடவுளின் சந்நிதியிலிருந்து வருவதாகும். அவ்வாறு கடவுளிடத்திருந்து வருவதாகிய ஆன்மா அங்கு பெற்றிருந்த திவ்விய தேஜஸ்ஸை முற்றிலும் இழந்து விடுவதில்லை. அவ்வொளியானது தன்னைச் சூழ்ந்து தொடர்ந்து வர அவ்வொளியோடு கூடவே உதிப்பதாகும். (எ - று)

4. குழவியா யாமிவண் குலவும் போதினில்
அழகி னவ்வொளி நமையணைந் து சூழுமால்
மழவினை நீங்கியே முதுமை வாய்தலும்
எழில்தரு மதுநமை விடுத்தங் கேகுமால்.

(இ - ள்) சிறுகுழந்தையா யிருக்குங் காலத்தில அந்த திவ்விய தேஜஸ்ஸை நாம் நம்மைச்சுற்றி எங்குங்காண்கிறோம். அந்தக் குழந்தைப்பருவம் நீங்கி வயது செல்லச்செல்ல அவ்வொளியும் நம்மைவிட்டு சிறிது சிறிதாக நீங்கி நம் கண்ணிற் புலப்படாமல் போய்விடுகின்றது. (எ - று)

5. உலகெனு மிருஞ்சிறைச் சாலை யோங்கிய
வலியிருள் வரவரச் சூழ்ந்து மல்குமால்
நலியுமப் பொழுதினும் நலங்களவ் வொளி
நிலவுறு மகிழ்விடை நெருங்கக் காண்பமால்.

6. தோன்றுறுங் கிட்டிசை விருத்தத் தன்னமேல்
ஆன்றநீ ணெறிபடர்ந் தகலு மம்மகன்
சான்றொளிர் இயற்கையாம் கடவுள் பூசனை
தோன்றொளி மலர்கொடு செய்வ னுவனால்.

7. இலங்குறும் தோற்றமா ரினிய காந்தியை
நலங்கொளக் காண்பமால் நயப்பச் செல்நெறி ;
சலங்கொளும் முதியராய்ச் சமைந்த காலையில்
விலங்குமவ் வொளிவெறும் வெய்யிலாகியே."

(இ - ள்) சிறைச்சாலைபோன்ற இவ்வுலகின்கண்ணே தோன்றுவதாகிய ஆசாபாசங்கள் என்னும் இருளானது நாளுக்குநாள் அதிகரித்து ஆன்மாவைச் சூழ்ந்து பந்தித்தலாலே அந்த திவ்விய தேஜஸ்ஸை நாம் இழக்கவரினும், ஓரோர் காலையில் நாம் கவலையும் துயருமற்றுக் களித்திருக்கும்போதாயினும், அவ்வொளியைச்சிறிது காணப்பெறுகின்றோம். கதிருயத்துக் கிடமாகிய கீழ்த்திசைபோலும் நமது பிறப்புக் காலம் தொடங்கி நாள்நாளும் நாம் முன்னோக்கிச் செல்ல நமக்குவயது முதிருமாயினும், இன்னமும் இளைமைப்பருவம் கடவாத பாலியத்தில் நாம் சூரியன், ஆறு, மலை, வனம், மரம், மலர் முதலான இயற்கைப் பொருள்களை வியந்து துதித்தல் உண்மையாகும். அந்த திவ்விய தேஜஸ்ஸை நாம் செல்லுந்தோறும் உடன்வரக் கண்டுகொண்டே சென்று

கடைசியில் வயது மேலிட்டு முதுமைப்பருவத்தை யடைதலும் முற்றும் இழந்துவிடுகிறோம். அப்பொழுது இவ்வுலகில் வெயிலொளி தவிர வேறு விசேஷம் நமக்குப் புலப்படாமலே போகும். (எ - று)

ஆதலின் மானுஷ ஜன்மமானது பெறுதற்கரிய உயர்வை யுடையதென்று யாவரும் ஒப்பும் விஷயமே. அதனைப் பெற்ற காலத்தில் அது சாதகமாகத் தர்மார்த்த காம மோக்ஷங்களாகிய புருஷார்த்தங்களை பெறுதலைவிட்டுக் கேவலம் உண்டுடுத்துக் கண்டு களித்து விலங்குகள் போலத் திரிந்து வாணாள் வீணாகப் போக்குவதன்றியும், ஐயோ! எத்தனை ஜனங்கள் மறுமைப்பயனைச் சிந்தியாமலே கொடிய பாவங்களைச் செய்து தம்மை நரகத்துயரத்துக்கு ஆளாக்கிக் கொள்ளுகிறார்கள்! இவர்கள் மனுஷ்ய ஜன்மத்தின் அருமையையும் பெருமையையும், சரீரத்தின் நிலையாமையையும், ஆன்மாவின் அழியாமையையும், பாபத்தின் தண்டனையையும் அறிந்து தெளிந்து பிரத்தியக்ஷமாகக் காண்பாராயின் அப்படிச் செய்வார்களா? ஆயினும் அறிவிற்சிறந்த கல்விமான்களுங்கூட அறிவழிந்து காமக்குரோதாதி ஆசாபாசங்களிலே சிக்குண்டு பாதகங்களுக்கு உள்ளாகிறார்கள்.

இவ்வுண்மையை ஆராயுங்கால் விவேகத்தினாலே காமாதி குற்றங்களின் தீப்பயன்களைக் கண்டு மனத்தைப் பொறிகளின் வழியே போக்காமல் நிக்கிரகித்தல் எவ்வளவோ அருமையாகும் என்பது தோன்றும். மனமென்பது நம்முடைய நன்மைக்கும் தீமைக்கும் காரணமாயுள்ளது. நல்வழியிற் சென்று நற்செய்கைகளில் நம்மைத் தூண்டுவதும் அம்மனந்தான். தீவழிகளிற் சென்று தீச்செயல்களில் நம்மைத் தூண்டுவதும் அம்மனமே யாகும். மனமானது சதாகாலமும் குரங்குபோல ஓடிக்கொண்டிருப்பது; இதைச் சுட்டியன்றோ ஆசாரிய சுவாமிகள் தமது சிவானந்த லகரிஸ்ஸ்தோத்திரத்தில்,

"மோகமாம்வனம் உலவும் மங்கையர்
முகிழ் முலைக்குவ டேறியே
ஓகையோடு நடித்திடும் வளர்
ஆசை யென்ன வுரைக்குமா
சாகைதாவி அலைந்திடும் நிலை
சற்றும் இல்லது பற்றுவாய்
ஏகனே இமனக் குரங்கினை
அன்பெனும் தளையிட்டரோ."

அதாவது, ஓ ஈசுவரா! எப்போதும் சம்சாரமாகிய காட்டில் அலைவதாய், ஸ்திரீகளின் ஸ்தனமாகிய பர்வதத்தில் நாட்டியம் செய்வதாய், புத்ரதாராதிகளிடத்தில் வைத்த பிரேமையாகிய கொம்புகளில் தாவித் திரிவதாய், க்ஷணமாத்திரமும் நிச்சலமில்லாமல் ஊழல்வுதாகிய என்மன

மான குரங்கை பக்தி யென்னுங் கயிற்றால் கெட்டியாகக்கட்டி உனக்கு ஸ்வாதீனமாக்கிக் கொள்வாயாக.

என்று பிரார்த்திக் கின்றனர். இம்மனோ நிக்ரகமானது எவ்வளவோ சாதித்ததற்கு அருமையாகும்.

"வாடவென மறுகுகின்ற மனமடங்கும் வகைதடுப்பான்
ஆயவவ னரிபிரம னிந்திரன் சண்முகன் குருவும்
ஏயபல தேவதைகள் யோகிதபோ தனனறிஞன்
ஆயினெல்லா முடையானு மவனனங்கு நுணங்கிடையாய்.

அறிவுநிலை தவமடக்கண்யம் புண்ணியநதியானங் குணங்கள்
நெறியுடைய முத்திநெறி முத்தியுபா யங்கினைக்கின்
மறுகும்வளி யனையமனம டங்குவதொன்றியா ததுவே
அறிவுடையோ ரிவையனைத்து மாமொன்றே யறைகுவரால்."

அதாவது, துவளும் நுண்ணிய இடையயுடைய மாதே! எவனொருவன் வாயுவைப்போலச் சஞ்சலமாயிருக்கின்ற மனம் அடங்கும்படி தடுக்கவல்லானோ அவனே-விஷ்ணுவும், பிரமனும், தேவேந்திரனும், குமரக்கடவுளும், ஆசாரியனும், சமஸ்த தேவதைகளும், சிவயோகியும், தபோதனனும், பரமஞானியும் ஆவான். ஆராயுமிடத்து எல்லா நன்மையும் உடையவனும் அவனே; அன்றியும் வாயுவைப்போலச் சஞ்சலமாகிய மனம் அடங்குகைக்கு யாதோருபாயமுண்டு; அவ்வுபாயந்தானே அறிவும், தைரியமும், தவமும், அடக்கமுடைமையும், புண்ணியமும், தியானமும், விசேஷ குணமும், முத்திக்கு வழியும், முத்திக்கு உபாயமும் அனைத்தும் ஆகும்.—

என்று பலவாறு அநேக நூல்களில் மனோ நிரோதத்தின் அருமையையும் பெருமையையும் வியந்து கூறியுள்ளது.

ஆதலின் பெறுதற்கரிய மானுட ஜன்மத்தை முற்பிறப்புக்களிற் செய்த சுகிர்தத்தாலும் தெய்வகதியாலும் பெற்றபோது கல்வியைக் கற்று, ஞானத்தைப்பெற்று, மனோ நிக்ரகத்தையுற்றுத், தீவினையில் நீங்கி, தானமும் தவமும் செய்து, இறைவனது திருவருளை யடைந்து பிறவித்துன்பம் நீங்கி மோக்ஷ சாம்ப்ராஜ்யத்தைப்பெற்றுக்கொள்ள எவ்வகையாலும் முயற்சி செய்வது ஒவ்வொருவர்க்கும் கடமையாகும்.

எஸ். முத்து ஐயர், பி.ஏ.

சா (சா) ர்வாக மதமும், அதன் கண்டனமும்.

சா (சா) சர்வாகமென்று வழங்கும் நாஸ்திக மதத்தின் இறுதிபாகத்தைச் சற்று விசாரிப்பாம். சா (சா) ர்வாகர்கள் கூறுவதென்னையெனின் :—ஜனங்களே! புற மதத்தவர்கள் கூறுமனுமானப் பிர

மாணத்தில் அநேக தோஷங்களிருப்பதால் அதை ஒப்புக்கொள்ளக்கூடியதில்லை; அனுமானப்பிரமாணத்தை புறமதத்தவர்கள் கூறுவதாவது :— ஸ்வார்த்தானுமான மென்றும், பார்த்தானுமான மென்றும்இருவகைப்படும்.

புகையிருக்கு மிடங்களில் நெருப்பிருப்பதை முன் பல யிடங்களில் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்து அதனால் எங்கெங்கே புகையிருக்குமோ ஆங்காங்கு நெருப்பு மிருக்குமென்று ஞானத்தினால் புகையிருப்பதைப் பற்றியே நெருப்பை யறிவது ஸ்வார்த்தானுமானம் என்று கூறப்படும். அதிதூரத்தில் புகை யுண்டாவதைப் பார்த்துக்கொண்டிருக்கும் ஓர் பையனைப்பார்த்து, பையா! அதோ புகையிருப்பதைப்பார்த்து நெருப்பிருக்கிறதென் றறிந்துகொள்; எங்கெங்கு புகையிருக்குமோ, ஆங்காங்கு நெருப்பு முள்ளது; உனது சமயல் வீட்டில் போய்ப்பார்; அங்கு புகையையும் நெருப்பையுங் காணுவாய்; புகைக்கும் நெருப்பிற்கும் சாகசரிய மிருப்பதால் புகை யிருப்பதாலிவ்விடத்திலும் நெருப்பிருக்கிறதென்று தெரிந்து கொள்' என்று இவ்விதம் மற்றொருவனைப்பார்த்து அறியச்செய்வதே பரார்த்தானுமான மென்று கூறப்படும்.

இவ்விரண்டு விதமான அனுமானங்கட்கும் எங்கெங்கு புகையிருக்கிறதோ, அங்கங்கு நெருப்பிருக்கும் என்றும் புகைக்கும் நெருப்பிற்கும் உள்ள சாகசரிய மாகியதும், உபாதியற்றதுமான ஸம்பந்தத்தின் ஞானமே காரணம். இதையே வியாப்தி ஞானமென்று கூறப்படும்.

இவ்வியாப்தி ஞானத்திற்கு எது உபாயம்? பிரத்தியக்ஷமா? அங்ஙனமாகில் பாஹியப் பிரத்தியக்ஷமென்று கூறப்படும் நேத்திராதிந்திரிய பிரத்தியக்ஷமா? அல்லது மனதினது பிரத்தியக்ஷமென்று சொல்லப்படும் ஆந்தரப்பிரத்தியக்ஷமா? முதலிற் கூறிய பாஹ்ய ப்ரத்தியக்ஷ மதன் உண்மையல்ல; ஏனென்றால், கண் முதலான இந்திரியங்கள் ஸம்பந்தமுள்ள வஸ்துவை யறிந்தாலும, சென்றதும் செல்லுகிறதும் செல்லப்போகிறதுமான காலத்திரயத்திலும் தோற்றமாயிருப்பதுதான் வியாப்தி ஞானத்திற்கு உபாயமாகாது; இரண்டாவதுகூறிய ஆந்தரப்பிரத்தியக்ஷமும் அதன் உபாயமாகாது.

" त्यक्षराद्युक्तविषयं परतंत्रबहिर्मन :।''

என்றுகூறியபடி, கண் முதலான இந்திரியங்களால் காண்பிக்கப்படுவதையேவிஷயமாக உடையதாகையால் மனதானது பரதந்திரமான மனதாலேயே அறியக்கூடியதுமல்ல. ஆகையால் ஆந்தரப்பிரத்தியக்ஷமுமதன் உபாயமல்ல. அனுமானத்தையே வியாப்தி ஞானத்திற்குக் காரணமாய்க் கூறுவதும் யுக்தமல்ல. ஏனென்றால், அனுமானத்தின் மூலமாகிய வியாப்தி ஞானத்திற்கு அனுமானமே உபாயமென்பது மேன்மேலும் வரும் எல்லையற்றதான தோஷமென்பது யாவராலும் அறியப்பட்ட விஷயமே,

பிரத்தியக்ஷ மனுமான முபமானம் சப்தமென்று கூறப்படும் நான்கு பிரமாணங்களுக்குள், ஒன்ருகிய உபமானப் பிரமாணத்தையேன் வியாப்தி ஞானத்திற்கு உபாயமாக ஒப்புக்கொள்ளக் கூடாது என்றால் அதுவும ஸங்கதம். தேவதத்தனைப் போன்றவன் யக்ஞதத்தன் என்னும் இவ்வித மான உவமையால் அறிவதே உபமானம்; அவ்வுபமான பிரமாணம் வியாப்தி ஞானத்திற்கு உபாயமென்று எவன் கூறுவான்? சப்தப்பிரமாணத்தையும் உபாயமென்று எவன் கூறுவான்? சப்தப்பிரமாணத்தையும் உபாயமாகக் கூறுவது அயுக்தம்; ஏனென்றால் புறமதத்தவர்களுள் சிலர் சப்த பிரமாணத்தில் அடங்கியது என்கிறார்கள். ஆகையால் அனுமானத்தோடு அதையும் தள்ளி விட்டோம். சப்தப்பிரமாணம் தனியாய் ஒப்புக்கொள்ளக்கூடியது தான்; ஆகலின் சப்தத்தையே வியாப்தி ஞானத்திற்கு உபாயமென்போமென்றால் அதுவும் அயுக்தம். இது குடம், இதுமடம், அது மாடு என்று இவ்விதம் ஆப்தன் சொல்லும் வசனத்தால் அதையறிவது சப்தப்பிரமாணம் என்று கூறப்படும். அவ்விதம் ஒருவன் புகைக்கும் நெருப்பிற்கும் ஸாகசரிய நியமமிருக்கிறதென்று அறியென்றால் அதனால் நாம் அதை எப்படி ஒப்புக்கொள்ளக்கூடும்? ஆகையால் சப்தமும் வியாப்தி ஞானத்திற்கு உபாயமல்ல.

தவிரவும் உபாதி யென்னவென்று தெரிந்து கொண்டாலல்லவா அதன் சம்பந்தத்தைத் தெரிந்து கொள்ளக்கூடும். அவ்வுபாதி ஞானமோ வியாப்தி ஞானத்தினால் வரும்; அவ்வியாப்தி ஞானமோ உபாதி ஞானத்தினால் வரும்; என்று இவ்வித மன்னியோன்னியாச்ரய தோஷத்தினால் வியாப்தி ஞானம் ஸித்திக்காமல் போக அது பற்றியே அனுமானப் பிரமாணமும் ஸித்திக்காததினால் அனுமானத்தைப் பிரமாணமாக ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல. புகையிருக்கிறதைப் பார்த்து நெருப்பை அறிகிறார்களே யென்றால், அது பிரமமே யொழிய வேறில்லை. கானலை நீரென்றும், கட்டையைக் கள்ளனென்றும், கயிற்றை அரவமென்றும் நினைப்பதல்லவா ப்ரம்மம், இது அப்படியிருக்கக்காணோமே, புகையைப்பார்த்து நெருப்பு இருக்கிறதென்று அறிந்து ஸமீபத்தில் போய்ப்பார்த்தால் நெருப்பு வாஸ்தவமாகவே யிருக்கிறதே என்றால கூறுவோம். மணிமந்த்ர ஔஷதம்போல் யதிருச்சையாய் இருக்கிறதே யொழிய உண்மையல்ல. ஆகையால் பிரத்தியக்ஷமா யறியக்கூடாததான கர்மம், ஜந்மம் முதலானவைகள் உண்மையல்ல.

“अग्निरुष्णोजलंशीतं शीतस्पर्शस्तथानिलः ।
केनेदंचित्रितं तस्मात्स्वभावात्तद्व्यवस्थितिः ॥”

என்றபடி உலகம் அநேகவிதமாயிருப்பது ஸ்வபாவமே யொழிய வேறில்லை.

ஆகையால் ஸ்வர்க்க மென்பதும், பரலோக மென்பதும் ஆத்மா நித்யனென்பதும் நம்பக்கூடியதல்ல; இதெல்லாம் பிதற்றல் தான். பிராமணன் என்றும், க்ஷத்திரியனென்றும், வைசியனென்றும், சூத்திரனென்றும் இருக்கிற ஜாதிகளின் பிரிவினுலென்ன பயன்? பிராமணனென்பவன் யார்? புறமதத்தவர்கள் கூறும் ஜீவனு? சரீரமா? ஜாதியா? ஞானமா? அல்லது தருமத்தினுலா? ஜீவன் பிராமணனென்ருல் புறமதத்தவர்கள் கூறுகிறபடி எல்லாச் சரீரத்திலு மிருக்கிறவன் ஒரே ஜீவனுகையால் எல்லாப் பிராணிகளும் பிராமணர்களாக வேண்டும்; அதுவோ அஸங்கதம். தவிரவும் ஜீவனுனவன் கருமங்களுக்குத் தகுந்த பயனை அடையவேண்டிய நாய் நரி முதலான அநேக ஜந்மங்களைப் பெறுகிருன் என்றுபுறமதத்தவர்கள் கூறுகிறபடி நாயும் நரியும்கூட பிராமணனுக வேண்டும்; அதுவோ அஸங்கதம்; ஆகையால் ஜீவன் பிராமணனல்ல. சரீரம் பிராமணனென்ருல் சண்டாளன் முதல் பிராமண ஜாதி வரையில் எல்லாச்சரீரங்களும் புறமதத்தவர்கள் கூறுகிறபடி ஐந்து பூதங்களின் விகாரந்தான்; ஜரைமரண முதலானவைகளும், எல்லாச்சரீரங்கட்கும் உள்ளது தானுகலின் சரீரமும் ஒரே மாதிரியாயிருப்பதால் அது பிராமணனல்ல. கருப்பு சிவப்பு முதலான நிறபேதங்களால் பிராமணனென்ருல் நிறமும் நியதமல்ல; தவிரவும் தகப்பன் தாய் முதலானவர்கள் இறந்தவுடன் அவர்களது தேகத்தைப் புத்திரன் தகனஞ்செய்கிறபடியால் அவனுக்குப் பிரமஹத்தி தோஷம்வரும். ஆகையால் சரீரம் பிராமணனென்பதும் யுக்தம். ஜாதியினுல் பிராமணனென்ருல் புறமதத்தவர், ரிஷிய சிருங்கர் என்றுகூறும்முனிவர் மானிடராயுண்டானவர் என்றும்,கௌசிகர்நாணலிலுண்டானவ ரென்றும், ஜாம்பூகர் நரியினிட முண்டானவரென்றும், வியாதர் ஓடக்காரன் மகளிட முண்டானவரென்றும், கௌதமர் முயலினிட முண்டானவரென்றும், அகத்தியர் குடத்திலுண்டானவ ரென்றும், கூறுகிருர்களே, இவர்களைத்தானே பிராமணர்களென்று கூறுகிருர்கள். அஃதெங்ஙனங்கூறுவது? ஆகையால் ஜாதியினுலும் பிராமணர்களென்று சொல்லுவது அயுக்தமே. ஞானத்தினுல் பிராமணனென்ருல் அதுவுமயுக்தம் தான். பிராமணனல்லாத மற்ற ஜனங்களனேகர்கட்கு ஞானமிருக்கிறபடியால் தருமத்தினுல் பிராமணனென்ருல், ஹீனஜாதியார்களும் தானதருமங்களைச் செய்கிருர்களாகலின் அவர்களும் பிராமணர்களாகவேண்டும்; அதுவோ புறமதத்தவர்களது கொள்கைக்கு விரோதம். மேற்கூறிய காரணங்களால் பிராமணன் முதலான ஜாதிபேதங்கள்கூடாது

"नस्वर्गोनापवर्गोवा नैवात्मापारलौकिकः ।
नैववर्णाश्रमादीनां क्रियाश्चफलदायिका: ॥"

என்று பிரகஸ்பதி பகவான் கூறுவதே நியாயம்.

யாகத்தில் வதத்தை யடையும் ஆட்டுக்கு ஸ்வர்க்கமுண்டென்று கூறுகிறபடி தன் தகப்பனையே யவ்வாட்டுக்குப் பதிலாக வதை செய்து அவன் ஸ்வர்க்கத்தை யடையுமாறு செய்யலாமே, அவ்வாறு செய்யாமையால் ஜீவஹிம்சை செய்தாயினும் யாகஞ்செய்வது பிதற்றலேயாகலின் பிரயோசனமில்லை. "இறந்துபோன ஜநங்களை யுத்தேசித்து நடத்தும் சிராத்தம் முதலான கர்மங்களால், இறந்தவர்கள் திருப்தியடைவார்களேயானால், வழிப்பயணம் போகிறவர்கட்குக் கட்டிச்சோறு கட்டிக்கொடாமல் அவர்களை யுத்தேசித்து அயலார்கட்கு உணவிட்டு திருப்தி செய்யலாமே. ஸ்வர்க்கலோகஞ் சென்றவர்கள் சிராத்தாதிதான கிரியைகளால் திருப்தி யடைவதுபோல் ஓர் வீட்டின் மேல் மாடி கட்டிடத்திலிருக்கும் ஒருவனை உத்தேசித்து, கீழ் கட்டிடத்தில் ஒருவனுக்குப் பசிதீர அன்னம் படைத்தால் போதுமானதாய் விடுமா? ஆகாதது போல சிராத்தாதி கருமங்கள் உபயோக மற்றவைகளே" என்பதற்கிணங்க.

"पशुश्चेन्निहतस्वर्गे ज्योतिष्टोमेगमिष्यति ।
स्वपितायजमानेन तत्रकस्मान्नहिंस्यते ॥
मतानामपिजन्तूनां श्राद्धंचेत्तृप्तिकारणं ।
गच्छतामिहजन्तूनां व्यर्थंपाथेयकल्पनं ॥
स्वर्गस्थिताःयदातृप्तिं गच्छेयुस्तत्रदानतः ।
प्रासादस्योपरिस्थानामत्रकस्मान्नदीयते ॥"

என்று பிரகஸ்பதி பகவான் கூறிய நியாயத்தை யனுசரித்து, ஆரியமதமென்பது ஜீவனோபாயமே யொழிய உண்மையல்ல வென்று கொள்ளுங்கள்.

"மூவ்வேதங்களை பண்டன், தூர்த்தன், நிசாசரன் என்னும் மூவர்களே செய்தவர்கள். 'ஜர்ப்பரி', 'துர்ப்பரி', என்னும் மந்திரங்கள் உச்சரித்துக்கொண்டு குதிரையின் ஆண்குறியை யாகம் செய்பவனுடைய பத்நியானவள் பிடித்துக்கொள்ள வேண்டும்", என்னுங் கருத்தையமைத்து,

"त्रयोवेदस्यकर्तारो भण्डधूर्तनिशाचराः ।
जर्फरीतुर्फरीत्यादि पण्डितानांवचस्मृतम् ॥
अश्वस्यात्रहिशिश्नंतु पत्नीग्राह्यंप्रकीर्तितम् ॥"

என்று தேவகுரு கூறியதையுங் கவனியுங்கள். நகைப்புக் கிடமாயிருக்கின்றதல்லவா? ஆரியம் என்னும் மாயத்தில் மயங்காதேயுங்கள். 'சா (चा) ர்வாகம் என்ற' நாஸ்திக! மதத்தைத் தழுவுங்கள்.

மேற்கூறிய படிக்குள்ள சா (चा) ர்வாக மதத்தினது இறுதி பாகத்தின் கண்டனத்தை இனி உரைப்பாம்.

(இன்னும் வரும்.)

கணேச ஆரியர்.

சுதேசாபிமானம்

நாம் வாசஞ்செய்யும் இந்து தேசமானது கல்வியிலும், விவேகத்திலும், தெய்வபக்திலும், மதாசார விஷயங்களிலும் மற்ற தேசங்களைக் காட்டிலும் அதிகரித்துக் குன்றின்மேலிட்ட விளக்கைப்போல் பிரகாசித்தாலும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையின்றி அரசாங்க விஷயங்களையறிந்து பரிந்து பேசுபவர்களைத் தெரிந்து அவர்களுடன் கலந்து ஓரிடத்தில் அமைந்து யாவரும் முனைந்து அரசாங்கத்தாரிடமிருந்து பல சுதந்தரங்களையு மடைந்து மனங்குளிர்ந்து குதூகலிக்காமல், இங்குள்ள பெரும்பாலார்களும் ஒதுங்கி மற்றவர்களைப்பார்க்கப் பின் தயங்கி மூலைமுடக்குகளில் தூங்கிவழிகின்றதைக் காண நம்மனம் பதைக்கின்றது. ஆ! ஆ!! நமது அப்பனாகிய ரிப்பன்பிரபு அவர்கள் நமக்கு மனமுவந்தளித்த சுயவரசாட்சிக் காதாரமாகிய பத்திரிகா சுதந்தரம் சபாப் பிரயோஜனம் என்ற இரண்டு விஷயங்களே நாம் முன்னுக்குவரும் மார்க்கங்களில் முக்கியமானதாகும். இந்துக்களாகிய நம்மவர்கள் தற்காலம் அவைகளை யாதரிப்பவர்கள் மிகச்சொற்பமானவர்களாகவே இருக்கிறார்கள். ஆயினும் நமது தேசத்திலுள்ளோர் யாவரும் என்றைக்குச்சமாசாரப் பத்திரிகைகளை ஆதரிக்கப்புறப்படுகின்றார்களோ அன்றே, நமது நாட்டார் எல்லோரும் சுகமுற்றுவாழத்தடையில்லை. நமதுநாட்டில் இப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டு விளங்கும் பல சபைகளும் அததற்கேற்ற வண்ணமாகப் பரிபாலிக்கப்பட வில்லையென்பது யாவரும் அறிந்தவிஷயமே. ஆனால் யார் யார் எந்ததேசத்தில் பிறந்து வளர்ந்து அதிலுள்ள சுக துக்கங்களுக்காகப் பாடுபடுகிறார்களோ, அவரவர்களுக்கு அந்தந்த தேசத்தில் அபிமானம் இருக்க வேண்டுமென்பது அத்தியாவசியந்தான். எந்தெந்த தேசத்தாருக்குத் தம் தேசத்தில் அபிமானம் இல்லையோ அந்தத்தேசம், பாதுகாத்தலின்றிப் பாழாய்ப்போகும். நமதுவீட்டைத் தினந்தோறும் சுத்திசெய்து அப்போதைக்கப்போது பழுதுபார்த்துச் சீர்படுத்தாவிடில் எப்படிப் பாழாய்ப் போகுமோ அவ்வாறே, நமதுதேசத்தையும் எந்தெந்தவிதமாய்ச் சீர்படுத்திப் பாதுகார்க்கவேண்டுமோ அந்தந்த விதமாய்ப் பாதுகாவாவிடில் பாழாய்ப்போம் அல்லவா. ஆங்கிலேயர், பிரான்சியர், ஜெர்மானியர், அமெரிக்கர், ஜப்பானியர் முதலானவர்கள் தங்கள் தேசத்தைத் தாங்கள் சொந்த வீடுகளைப்போல் எண்ணிப் பாதுகாத்து வருகின்றமையால், அந்தத் தேசங்கள் கல்வியிலும், சாஸ்திர வாராய்ச்சியிலும், கைத்தொழிலிலும், வர்த்தகத்திலும் விவசாயத்திலும், யுத்தாபியாசத்திலும், தைர்யத்திலும், ஆண்மையிலும், ஜயத்திலும், செல்வத்திலும், இராஜாங்க முறைமையிலும், நாகரீகத்திலும் இன்னும்

மற்ற விஷயங்களிலும் சிறந்து மேம்பாட்டடைந்து வருகின்றன. நமது தேசத்தாருக்குத் தேசாபிமானமில்லாமல், பொறாமையும் அசூயையும் கொண்டு, லோகோபகாரமாய் ஒருவன் எத்தனிக்கும் எந்தப் பொதுநன்மையான காரியத்தையும் பிரயத்தன புரஸ்ஸரமாய்க் கெடுக்க முயலுகிறார். ஆகலின், இத்தேசம் எல்லாத் தேசங்களிலும் தாழ்ந்த நிலைமையிலிருக்கின்றது. சுமார் இருநூறு வருஷங்களுக்கு முன் நமது தேசம் எவ்வளவு ஈனஸ்திதியிலிருந்ததோ அவ்வளவு ஈனஸ்திதியில் அக்காலத்தில் ஜப்பான் தேசமும் இருந்து வந்தது. அப்படிக்கிருந்தும் இக்காலம் அது முதன்மை பெற்று மற்றத் தேசங்களைவிட மேலானதாய் இருந்துவருகிறது. அந்தத்தேசத்தார் ஐக்கியப்பட்டுத் தேசப் பொதுநன்மைக்காக எவ்வளவோ பாடுபட்டு உழைத்தமையால் இப்போது அது மேலான ஸ்திதியை யடைந்தது. அவ்வாறு பாடுபடாமல் இராமனாண்டாலென்ன, இராட்சதனாண்டாலென்ன வென்று இருந்தமையால் நமது தேசம் நடையுடை பாவனை முதலிய எவையுமில்லாது கெடுகிறது. அதோடு சுதேச கல்விகுறைந்தது, வர்த்தகம் பாழாய்ப் போய்விட்டது, கைத்தொழில் வாயில் மண்விழுந்தது, ஒற்றுமையில்லை, தேசநன்மைக் குழைப்பவரில்லை, நமது தேசத்திலுண்டாகும் பருத்தி முதலிய காரணப்பொருள்களைச் சொற்ப விலைக்கு அன்னிய தேசவாசிகளுக்கு விற்றுகாரியப்படுத்திய பிறகு ஒன்றுக்குப் பத்து விலைகொடுத்து நாமே அவர்கள் காலில்விழுந்து வாங்கித் தரிக்கின்றோம். நமது தேசப்பணத்தை அன்னிய சேத்தாருக்கு வலியக் கொடுத்து (இஞ்சிதின்ற குரங்கைப்போல்) இளிக்கின்றோம்; பலமில்லாதவர்களும், அதைர்ய முள்ளவர்களும், தரித்திரர்களும், அடிமைகளும், ஆங்கிலேயர்களுக்கும் ஊழியர்களுமா யிருக்கிறோம். நமக்குத் தேசாபிமானம் நிரம்பியிருக்குமானால் அன்னிய தேசத்தாரைப்போல நமது தேசத்தை முன்னுக்குக் கொண்டுவர மாட்டோமா? ஒவ்வொருவரும் தம்தம் பிராணனையும் சரீரத்தையும் பெண்ஜாதி பிள்ளைகளையும் காப்பாற்றுவதில் அக்கரைப்பட்டவர்களா யிருந்தால் நம்தேசம் நன்னிலைமைக்கு எப்படி வரும்? இவ்வாறு இன்னும் இருப்போமானால் அன்னியர் காலாலிட்ட வேலையை நாம் தலையால் செய்து மாடுபோல் உழைத்து அவர்கள் வார்க்குங்கூழைக் குடித்து அவர்கள் பாதாரவிந்தமே கதியென்று கிடப்போமென்பதில் ஐயமில்லை; நடுநீதியுள்ள நம் ஆங்கிலேய கருணைக்கவர்ன்மெண்டார் நமக்கு எல்லா சுதந்தரங்களையும் கொடுத்தும் அதை ஆளத்தெரியாமல் அலட்சியமாய் இருப்போமானால் யார் என் செய்கிறது? ஒவ்வொரு தேசாபிமானிகளும் தங்களது மீதிப்பணம், அவகாசம், புத்தி இவற்றைப் பொது விஷயத்தில் செலவிட்டு வருவார்களானால் கொஞ்சநாளில் நமது தேசம் முன்னுக்கு வந்துவிடும். நமது தேசத்தில் அப்பேர்ப்பட்ட தேசாபிமானிகள் சிலருக்குள் வெகு சிலராயிருப்பதால் நம்மிந்து தேசம் முன்

னுக்கு வர எத்தனை யுகமாகுமோ வென ஐயுற வேண்டியதாயிருக்கிறது. இதற்குள் நமது சுதந்தரங்களை யெல்லாம் அன்னியருக்கிழந்து போவோ மென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

ஐரோப்பாக் கண்டத்திலுள்ள இங்கிலாந்து பிரான்சு முதலிய தேசங்களிலும், அமெரிக்காக்கண்டத்தில் நாகரிக மிகுந்த ஐக்யமாகாண முதலிய நாடுகளிலும் பத்திரிகைகளை வாங்கிப் படியாதவர்களேயில்லை. சாமான்யக் கூலிகளும் வாடகை வண்டியோட்டும் பரம ஏழைகளும் பத்திரிகைகள் வாசிக்கிறதையுமோர் முக்கிய வேலையாகக் கொண்டிருக்கிறார்களாம். அப்படியிருக்க, வித்வான்களைப் பற்றியும் கனவான்களைப்பற்றியும் கேட்பானேன் ? பிரபஞ்சத்தில் நடக்கும் யாவத் விஷயங்களையுமறிய வூக்கமுள்ளவர்களா யிருக்கின்றனர் அந்நாட்டார். இந்நாட்டாரோ பத்திரிகைகளை ஆதரிப்பதில்லை. சிலர் அவைகளை வாங்குதல் வீண் செலவு என்றும், வேலையில்லாதவர்கள்தான் பத்திரிகைகளை வாங்கி வாசிக்கவேண்டுமென்றும், ஊர் சமாச்சாரம் நமக்கென்ன வென்றும், ஒழிந்த திண்ணைகளில் கடுதாசியாடிக் காலங்கழிக்கின்றார்கள். வேறு சிலரோ சொந்த மனைவிகளை விட்டு அயல் மாதர்களைக்கூடி பாபத்தை வலுவில் சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள். சோம்பேறிகளாய்த் திரிகிறார்கள். இம்மாயப் பிரபஞ்சம் எமக்கேனென்று ஆஷாடபூதிகளைப்போல் வெளியிலொன்றும் மனதிலொன்றுமாக யாரை எவ்வாறு வஞ்சிப்போமென்று சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டு ருத்திராக்ஷப் பூனைகளாய்க் காணப்படுகிறார்கள். ஆகையால்தான் இத்தேசத்தில் சுதேசப் பத்திரிகைகளை ஆதரிப்பது மிகுந்த கஷ்டமாயிருக்கிறது. சிலர் மூன்று நான்கு பத்திரிகைகளைப் பெற்றுக்கொண்டு இனி பத்திரிகை வேண்டாமென்று தாக்ஷிண்யமின்றிக் கொஞ்சமேனுங் கைகூசாமல எழுதிப்போடுகிறார்கள். சிலர் பணம் கொடுப்பதென்றால் கையை உள்ளுக்கிழுத்துக் கொள்ளுகிறார்களே. வெளியில் வந்து டம்பாசாரிகளாய் எந்த விஷயங்களுக்கும் நானென்று பிதற்றித்திரிகிறார்களெ. நாங்களிப்பத்திரிகையை வாசிக்கத் தகுந்தவர்களாவென்று நீட்டுகிறார்கள் சிலர். இரண்டொருவர் எம்மை நேரில் கண்டபோது ஆகட்டும், பணம் அனுப்புகிறோமென்று மாத்திரம் சொல்லிவிட்டு, மௌனஞ் சாதிக்கிறார்கள். இனமாக வென்றால் எனக்கொன்று, என் பிள்ளைக்கொன்று என்கிறார்கள். பணமாயிருந்தால் நம்மாலாகாதென்கிறார்கள். இப்படிக் கெல்லாமிருந்தும் நாம் முயற்சியைத்தளர விடுவதற்கில்லை. ஆகையால் ஓ ! கனவான்களே ! ! இதுகாலம் இருந்ததுபோல் இராமல் சுதேச கல்வியை யபிவிருத்தி செய்தல், கைத்தொழிற் சாலைகளை ஸ்தாபித்து வறுமையாளர்க்குப் பிழைப்புண்டாக்கல், வர்த்தகத்தை யதிகமாய்ப் பெருக்கப்பார்த்தல், பயிர்த்தொழிலை சாஸ்தி

ரோக்தமாய் செய்தல், விசேஷ பணத்தைத்தேடல், பத்திரிகை படித்தல், ஊர்கள் தோறும் சபைகள் ஏற்படுத்திப் பொதுஜன க்ஷேமத்துக்குப் பாடுபடல், பிரசங்கம்புரிதல், அன்னியநாட்டு சாமான்களுக்கு அதிக வரிபோடப்பண்ணி உள்நாட்டுச் சாமானையே வாங்கிவருதல் இராச்சிய தந்திரங்களைப் போதித்தல் முதலிய காரியங்களைச் செய்து வரல்வேண்டும். இதற்காகப் பலர் இல்லாவிடினும் சிலராவது முன்னின்றுவேண்டிய முயற்சிசெய்து நம்மிந்து தேசத்தை நன்னிலைமைக்குக் கொண்டு வருவீர்களானல் வெகு உபகாரமாயிருக்கும்.

தஞ்சைஜன நேசன்.

டில்லிமாநகரும், அதில் நடந்த நமது 7-வதுஎட்வர்டு அரசரின் மகுடாபிஷேகச்சிறப்பும்.

மனிதனைக் கடியாரத்திலுள்ள ஓர் பெண்டுலத்திற் கொப்பிடலாம். எப்படி பெண்டுலமானது நிலையாயிராமல் சதா ஆடிக்கொண்டேயிருக்கிறதோ அப்படியே, மனிதனும் சுகதுக்கங்கட் கிடையில் கிடந்துழலுகிறான். நம்முடைய வாழ்நாட்களில் பகல் இரவு மாறிமாறி வருவதுபோல் மனிதர்கட்கு சுகதுக்கங்கள் மாறிமாறி வருகின்றன. ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு குலத்தினரும், ஒவ்வொரு நகரமும், அமரிக்கை, செல்வம், அதிகாரம் இவைகளை வெகு காலங்கொண்டு பிரகாசித்தும், பிறகு பிரகாசமில்லாது மங்கியும் போக நேரிடுகின்றது.

பூர்வத்தில் அயோத்திமாநகர் மிகச் சிறப்புடன் செல்வப் பெருக்குள்ளதாய் சூரிய வம்சத்தரசர்களால் அரசுபுரியப்பட்டு வந்ததாய் ஸ்ரீமத் ராமாயணம் கூறுகின்றது. அஸ்திநாபுரியானது சந்திரவமிசத் தரசர்களால் சிறப்புற்றிருந்ததாக மகாபாரதம் கூறுகின்றது. அவ்வாறே சிறப்புற்றிருந்ததாக, த்வாரகை, தாரா முதலிய நகரங்களைப் பற்றியும் பற்பல புராணங்களாலறிகிறோம். அவைகளில் அநேக நகரங்களழிந்து போயின. அழியாத சிலநகரங்களிலும் அவைகளின் பூர்வீகச்சிறப்பை அறிவிக்கும் அடையாளங்கள் யாதொன்றுங் காணப்படவில்லை. பண்டை நாட்களில் மேற்கூறிய நகரங்கள் எவ்வளவுக் கெவ்வளவு கீர்த்திமிகுந்தோங்கி யிருந்தனவோ, அவ்வளவுக் கவ்வளவு அதனதன் வளங்குன்றி இப்பொழுது சுத்த கேவலஸ்திதிக்கு வந்து விட்டன. ஆகலின், சூரிய ரச்மியிலிருக்கும் யாவத்சிருஷடிவர்க்கங்கட்கும் மாறுதல் உண்டாய்க்கொண்டேவருகிறது. பூர்வத்தில் ரவி சந்திர குல திலகர்களான க்யாதிபெற்ற அநேக அரசர்கள் இந்திரபதவியைக்கூட அடையுந்தன்மையினர்களாயிருந்தும், இப்பொழுது அவர்கள் இருந்தஇடமேதெரியாமல் மறைந்ததே. சந்திரவமிசத்தில் இருபத்தியாறுந் தலைமுறையிலுதித்த மன்னனை துஷ்யந்த மகாராஜனுக்குச் சகுந்தலையினிடமாயுர்ப்பவித்த பரதன் காலம் துவக்கி சுமார் 70-நூற்றாண்டிற்குப் பிந்தியதான ஷாஆலம் என்பவனுடைய காலம்வரையில் டில்லிமா நகரின் சரித்திரத்தைச் சொல்லவுங்கூடும். அந்நகரின் சரித்திரத்தைச் சுருங்கச்சொல்லப்புகின் (1) க்ஷத்திரிய வரசாக்ஷி (2) இதர இந்து அரசாட்சி (3)

மகம்மதிய வரசாட்சி (4) ஆங்கிலேய வரசாட்சி என நான்கு பிரிவுகளாக வகுத்துக் கூறலாகும். கடைசியரசாட்சியான ஆங்கிலேய அரசாட்சியானது முதல் இராஜ பிரதிநிதியான கானிங்கு பிரபு அவர்கள் காலமுதல் தொடங்குகிறது.

டில்லிமா நகருக்கு பூர்வத்தில் இருந்த மகிமை இப்போழ்து முற்றும் போக வில்லை. ஆனால், அது முன் போல் இப்பொழுது இராஜதானியு மல்ல. அந்நகருக் கிருந்த செல்வாக்கும் இராஜாங்கமகிமையும் தற்காலத்தில் கல்கத்தாவையும் சிம்லா வையும் அடைந்திருக்கிறது. டில்லிமா நகரமானது அவுரங்கசீப் அரசாட்சியின் பூர்வபாகத்தில் தலைநகரமாயிருந்து, வரவர இறுதி பாகத்தில் சுத்த கேவல ஸ்திதிக் குவர ஆரம்பித்து விட்டது.

1857-58-ம் வருஷத்தில் இராஜதானி என்னும் பெருமை அது முற்று மிழந் தது. இந்தியன் சிப்பாய் கலகத்துக்குப்பிறகு (The great Indian Sepoy mutiny.) அது பெருத்த வியாபார ஸ்தலமாயும், சிறந்த இராணுவ ஸ்தானமாயுமாயிற்று. கிழ க்கு இந்தியன் இருப்புப்பாதை (East Indian Railway) யானது ஓர் இருப்புப்பா லத்தின் வழியாய் யமுனையைக் கடந்து டில்லிமா நகரை யடைகிறது. அப்பாலத் தின் வழியே பஞ்சாப் இருப்புப்பாதையும் அந்நகரை வந்தடைகிறது. இக்காலத்தி லும் பாரசிகம், ஆப்கானிஸ்தானம், கல்கத்தா, பம்பாய் இவைகளிலுள்ள சரக்குக ளின் வியாபாரத்திற்குச் சிறந்த மத்தியப் பிரதேசமாகவுமிருக்கிறது. வரவர டில்லி மாநகரின் வளமானது கொஞ்சங்கொஞ்சமாய் எட்டி எட்டிப் பார்க்கிறதாகக் காணப் படுகிறது. காலஞ் சென்ற விக்டோரியா மகாராணியார் அவர்களை இந்தியன் சக்கிர வர்த்தினி யென்று பிரசித்தப்படுத்த டில்லிமாநகரையே லிட்டன்பிரபுவானவர் 1877-ம் ஆண்டில் தக்க இடமாகத் தெரிந்தெடுத்தனர். அப்பொழுது மொகலாய இராஜதானியான அந்நகரத்தில் சிறந்த தர்ப்பார் ஒன்று நடத்தப்பட்டது. ஆனால் இதற்கு 19-வருஷங்கட்கு முந்தி அதாவது 1858-ஆண்டு நவம்பர்மாதம் முதல்தேதியில் ஆங்கிலேய அரசாட்சியை நமது மகாராணியார் கைக்கொண்டனரென்று பயிரங் கப்படுத்துமாறு பிரயாகை என்ற அலகபாத் என்னும் நகரத்தில் கானிங்கு பிரபு வானவர் மகாநாடு கூட்டினர். உலகத்துக்கு மாதாவாய் விளங்கிய மகாராணியார் தர்மந்தழைக்க இராஜ்யமாளுவதாய் எழுதியிருந்த ஓர் ஒப்பந்தமானது அம்மகா நாட் டில் வாசிக்கப்பட்டது.

1858ஆண்டில் டில்லிமாநகரில் கலகங்கள் நடந்துகொண்டு அதன் மேன்மை குன்றியிருந்ததால் அலகபாத்தை தக்க யிடமென இராஜப்பிரதிநிதி அவர்கள் தெரிந்தெடுத்தனர். 1877-ஆண்டில் லார்டுபீகன்ஸ் பீல்டு, லார்டு லிட்டன் இன்னும் மற்றுள்ள ஆலோசனை சங்கத்தார்கள் டில்லியின் சிறப்பை எடுத்துரைத்த பின்னர் நமது மகாராணியார் டில்லிமாநகரில் தர்ப்பார் கூட்ட உத்தரவு அளித்தனர். அதைக் காட்டிலும் வேறு சிறந்த நகரம் உளதென்று தென்படாததால் நமது தாத்காலத்திய இராஜப்பிரதிநிதியான கர்ஜன் பிரபு அவர்களும் மாட்சிமைபொருந்திய எட்வர்டு-vii மகாராஜா அவர்கள் இந்தியாவுக்கு சக்கிரவர்த்தி என்று பயிரங்கப்படுத்தும் பொருட்டு தர்ப்பாருக்கு யோக்கியமான ஸ்தானம் டில்லிமா நகரமென்றே அத்த லத்தை லார்டுலிட்டன் பிரபுவைப்போலவே தெரிந்தெடுத்தனர். அது நாம் சரித்தி ரத்தில் வாசித்திருக்கிறபடி ஆக்பருக்கு இராஜதானியாகவு மிருந்தது.

டில்லிமா நகரில் மிக்கச்சிறப்புடன் க்ரேட்பிரிட்டன் (Great Britain), அயர் லாண்டு (Ireland) இவைகளுக்கு அரசனான நமது 7-வது எட்வர்டு அரசர் இந்தியா

வுக்கு சக்கிரவர்த்தியார் என்றுப் பயிரங்கமாய் பிரசித்தப்படுத்துமாறு லார்டு கர்ஜன் பிரபு அவர்களால் 1903ஹு ஜனவரிமாதம் முதல்தேதியன்று மகா நாடு கூட்டப்பட்டது.

இத்திருவுருவமே நமது சக்கிரவத்தியாராம். ஈசுவரகிருபையால் இம்மகாபதவியைப் பெற்ற நமது 7-வது எட்வர்டு அரசரும் அலெக்சாண்டிரியா மஹாராணியாரும் நீடூழி வாழ்வாராக, அரசுச்செங்கோலை இந்தியாவில் நீடித்தகாலம் நிலை நிறுத்துவாராக.

இக்குணசீலர் 1841ஹு நவம்பர் மாதம் 9-தேதியில் பக்கிங்காம் அரண்மனையில் (Buckingham palace) காலை நேரமான சுமார் 10-45-மணிக்குப் பிறந்தனர். அக்காலத்தில் உலகிலுள்ளோர் அனைவரும் அதிகமகிழ்ச்சி யடைந்தனர். லண்டன் மாநகரத்து டவரி(Tower)லுள்ள மணி ஒலித்ததான து பிரிட்டிஷ் அரசாட்சியானது பரதகண்டமானதுஇவ்விந்தியாவின் முழு ஆளுகையும் கைக்கொள்ளப்போகிறதுஎன்றதுபோலிருந்தது. இவர்பிறந்ததும் இவருக்கு வேல்ஸ இளவரசர் (Prince Wales) என்று பட்டம் கொடுத்தார்கள். இவர்கொஞ்சகாலம் எடின்பரோவிலும் பிறகு ஆகஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைகளிலும் வாசித்தனர். 17-வது வயதில் கார்டர் என்றபட்டமும் கர்னல் என்றபட்டமும் பெற்றார். 1860ஹு த்தில் அமரிக்காவுக்குச் சென்றார். 1861ஹு டிசம்பர் மாதம் 14-தேதி இவர் பிதா காலஞ்சென்றார். இந்த வியசனத்தினால் பாலஸ்தின் ஜெரூசலம் முதலிய புண்ணிய பூமிகட்கு யாத்திரை சென்றார் இவ்விளவரசருக்கு 1863ஹு மார்ச்சுமீ 19உ டென்மார்க்கரசன் புதல்வியான அலெக்சாண்டிரியா என்னுமிளவரசியை மணம்புரிவித்தனர். 1875ஹுத்தில் நமதுஅரசர்இந்தியாவுக்கு விஜயமாகி சுற்றிச்சென்றனர். 1877-ல்(House of lords) பிரபுக்கள் கூடிய பார்லிமெண்டு சபைச்கு மெம்பராயினார். இவருடைய மாதாவாகிய விக்டோரியாமகர்ராணியவர்கள் 1901ஹுஜனவரிமீ 22உயில் காலஞ்சென்ற

அன்றே நமது 7-வது எட்வர்டு மகாராஜா அவர்கள் இந்த பிரிட்டிஷ் இராஜாங்கத்தைக் கைக்கொண்டனர். 1901ஞு ஆகஸ்டுமீ 9உயன்று லண்டன் மாநகரில் இவரது முடிசூட்டு உச்சவம் மகாவைபவத்துடன் கொண்டாடப்பட்டது. 1903ஞு ஜனவரிமீ 1-தேதியாகிய குருவாரத்தன்று டில்லியில் இவரது முடிசூட்டுக் கொண்டாட்டத்தை நமது வைசராய் லார்டு கர்ஸன் அவர்கள்சிறப்பாய் நடத்தினர் அவ்விஷயத்தைப்பற்றி பீஷ்வா முதல் பர்மா வரையிலுள்ள இடங்களிலேயும் காஸ்மீரம் முதல் கன்னியாகுமரி வரையிலுலுள்ள பிரதேசங்களிலும் டில்லிதர்ப்பாரைப்பற்றிய பேச்சாகவே பேசிக்கொண்டு ஜனங்கள் பரம சந்துஷ்டர்களாகயிருந்தனர். அன்று டில்லி மாநகரில் கோச்சி திருவாங்கூர் முதலிய இந்திய ராஜர்களும் அந்தந்த தேசத் தலைவர்களும் கனவான்களும் புடைசூழ லார்டு கர்ஜன் பிரபு அவர்கள் முதன்மையாக நின்று சக்கரவர்த்தியாரின் மகுடாபிஷேக உற்சவத்தை அதிக விநோதமாகக் கொண்டாடினார்கள், அப்பொழுது நமது கருணைப் பெருங்கடலாகிய மகாராஜா அவர்களால் இந்திய பிரஜைகட்கு அனுப்பப்பட்ட ஓர் நிருபத்தை அடியில் வருமாறு கர்ஜன் பிரபு அவர்கள் வாசித்தனர்,

"எனது மகுடாபிஷேக மகோச்சவகாலத்தில் எனக்குண்டான சந்தோஷத்தினால் இந்தியா பிரஜைகளை வாழ்த்தி எழுதிக்கொண்ட வர்த்தமானமாவது:—

லண்டன்மாநகரில் மகுடாபிஷேக தினத்தில் இந்திய ராஜர்களும் பிரதிநிதிகளும் சிலரே வந்திருந்தனர். இந்தியர்களெல்லாரும் எந்நாளும் ஞாபகத்தில் வைக்கும்படிக்கும் அவர்களும் இவ்வைப வானந்த சுகத்தை யனுபவிக்க வேண்டுமென்று தான் நமது இராஜப்பிரதிநிதியாகிய கர்ஜன் பிரபு அவர்கட்கு ஓர் பெரிய தர்ப்பார் கூட்ட உத்தரவளித்தேன். 1875ஞுத்தில் யான் இந்தியாவுக்கு வந்து போனது முதல் இந்தியாவின்பேரிலேயே வாத்சலயமிருந்தவனா யிருக்கிறேன். அவர்கட்கு என்னிடமும் என்னிட வம்சத்தாரிடமும் அன்பு பூர்த்தியாக யிருக்கிறதென்று தெரிந்துகொண்டேன். சமீபகாலத்தில் நடந்த யுத்தங்களிலும், ஜயங்களிலும் இந்திய ராணுவங்கள் உழைத்த நன்றியே அதற்கு அத்தாக்ஷியாக விருக்கின்றது. வேல்ஸ் இளவரசனான எனது ஸ்ரீமந்த புத்திரன் இந்தியாவைச் சுற்றிப் பார்க்கவேண்டுமென்பது எனது கோரிக்கை. அப்படியே அவருக்கு மனமிருக்கிறது. சீக்கிரம் இந்தியாவை அவர் விஜயஞ்செய்வார். இந்த வைபவத்தில் எனக்கு இந்தியாவுக்கு வரப் பிரியம்தான். அது கூடாமையால் எனது இளைய சகோதரனாகிய கன்னாட்டுக் கோமானை இந்தியாவுக்கு அனுப்பியிருக்கிறேன். உத்தமியும் எல்லாருக்கு மன்னையும் எனது மாதாவுமான காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியார் எவ்வாறு அன்பாய் தர்மஞ் செழிக்க இராஜ்யபரிபாலனஞ்செய்து பிரஜைகளின் அன்பையும் வணக்கத்தையும் கைக்கொண்டனரோ அவ்வாறு நானும் சன்மார்க்கத்தில் நடந்து கொள்ள மாட்டுவேன். இந்தியாவின் ஆதீனங்களையும் அதிகாரங்களையும் மரியாதைகளையும் கொஞ்சமேனும் அவமதிக்காமல் அவர்கள் நல்ல விதமாய் குடிவாழ்வுற்றுப் பெறுகுவதில் எனக்குப்பிரியமுண்டென்று மறுபடியும் உறுதியாய்ச் சொல்லுகின்றேன். என்னுடைய முயற்சிகள் இந்தியாவின் க்ஷேமத்தை யுண்டாக்குமாறு கடவுள் அருள்புரிவாராக."

இவ்வாறு படித்து முடிந்ததும், கோலாகலமாய் ஆகாயமண்டலத்தில் பிரகாசிக்கின்ற நக்ஷத்திரங்களுக்கிடையில் விளங்கும் பூர்ணமையிலுதித்த சந்திரனுக்குச் சமானமாய் அநேக அரசர்களும், கவர்னர்களும், மற்றுமுள்ள கனதனவான்

க்ளும் சூழ நமது வைசராய் லார்ட் கர்ஜன் அவர்களும் கன்னாட்டு இராஜகுமாரரும், ஆனையின்பேரில் அம்பாரிவைத்து அதிலாரோகணித்துச் சென்ற காட்சிகளும் பாணவேடிக்கைகளும், தீபாலங்காரங்களும், நம்மொரு நாவால் செப்பத்தரமல்ல. இத்தினத்தன்றே ஆங்காங்கே ஜில்லா கலெக்டர்களினாலேயும்,மற்றுமுள்ள தலைமை உத்தியோகஸ்தர்களினாலேயும், ஏழைகட்கு அன்னமளித்தும் வஸ்திரதானங்களைச் செய்தும் கல்விகற்குஞ் சிறுமி சிறுவர்களுக்குத் தின்பண்டங்களளித்தும், இரவில் மத்தாப்பு பாணவேடிக்கைகள் சகிதம் நமது சக்கிரவர்த்தியார் இராணியார் இவர்களின் படங்களை ஊர்வலம் வரச்செய்வித்தும், கோபுரங்கள் உப்பரிகைகள், குளங்கள் முதலிய இடங்களில் தீபங்களேற்றியும், கோயில்களில் அபிஷேக அர்ச்சனை நைவேத்தியங்கள் பல புரிந்தும் இவ்வுற்சவத்தை எல்லாரும் விமரிசையாகக் கொண்டாடிக் களித்தனர். நமது அரசர் ஜீவகாருண்யமுள்ள தர்மப்பிரபு. நமது விக்டோரியா மகாராணியார் காலத்திலேயே இந்தியாவானது நல்ல ஸ்திதிக்கு வந்துவிட்டமையால் நமது சக்கரவர்த்தியார் காலத்தில் மேன்மேலும் கௌரவத்தை அடையுமென்று எண்ணுகிறோம்.

சுபம்! சுபம்!

துறையூரில் எ-வது எட்வர்டு சக்கிரவர்த்தியாருக்காக நிகழ்ந்த முடிசூட்டு வைபவம்.

நமது 7-வது எட்வர்டு அரசர், 'இந்தியன் சக்கிரவர்த்தி'என்று நமது வைசராய் அவர்களாகிய லார்ட்கர்ஸன் அவர்களால் டில்லிமா நகரில் பயிரங்கப்படுத்தப்பட்டு தர்பார் கூடிய தினமாகிய 1903-ளு ஜனவரி௴ முதல்தேதியன்று இந்த ஊரில், "முடிசூட்டு வைபவச்சிறப்பு" என்னும் ஓர் உச்சவத்தை விமரிசையாய்க் கொண்டாடுவதற்காக அந்தரங்கமாயுள்ள இராஜ விசுவாசத்தை வெளிக்குக்காட்டியவர், முன் இந்த ஜில்லாவில் தாசில்வேலை பார்த்து பென்ஷன் பெற்றவரும், இப்பொழுது ஜமீன்தாரருடைய பிரதிநிதியும், யூனியன் அக்கிராஸனாதிபதியுமான S. அண்ணாமலைப் பிள்ளையவர்களே. அவர் இந்தகொண்டாட்டத்திற்காக சுமார் ஒருமாதத்திற்கு முன்னமேயே எடுத்துக்கொண்ட பிரயாசையின் மிகுதியை எம்மனோரால் செப்பத்தரமில்லை.

பிள்ளையவர்கள் ஜனவரி௴ முதல் தேதியன்று திருச்சிக் கொண்டாட்டத்தைக்கண்டு மகிழச்சென்றிருந்தாலும், அன்று அவ்வைபவதினமானபடியால் இந்த ஊரில் தானிருப்பதற்கில்லாமல் போனாலும், ஏழைகட் கமுதளித்தலும், வஸ்திரதானஞ்செய்தலும் முற்பகல் பதினோருமணிக்குள் நடத்தும்படிக்கும்; பிற்பகலில் சுமார் 5-மணிக்கு நமது 7-வது எட்வர்டு சக்கிரவர்த்தி அவர்களுடையவும், அலெக்ஸாண்டிரியா மகாராணியாருடையவும் திவ்வியமான படங்களை விநோதமாய் அலங்கரிக்கப்பட்ட விமானத்தில் அமைத்து நான்கு வீதிகளிலும், கடைவீதிகளிலும் சிறப்பாய் மத்தாப்பு பாணவேடிக்கைகளுடன் ஊர்கோலஞ் செய்யும்படிக்கும் அவர் ஏற்பாடு செய்திருந்தபடி, சப்ரிஜிஸ்தரார் ம-ா-ா-ஸ்ரீ கணபதி அய்யரவர்களும் எட்மாஸ்டர் ம-ா-ா-ஸ்ரீ கோதண்ட ராமானுஜாசாரியார் அவர்களும் மற்றுமுள்ள கனவான்களும் வெகுசிரத்தையாய் நடத்தினார்கள். ஊர்கோலத்தின்

போது சப்மாஜிஸ்திரேட் ம-া-া-ஸ்ரீ பக்ருடீன்சாயப்பு அவர்கள் திவ்வியாலங்கார உடுப்புகள் உடுத்து குதிரையின்பேரில் ஆரோகணித்துக் கூடச்சென்றனர். அன்று கொண்டாட்டம் அம்மட்டில் நடந்தது.

ஊரில் முக்கியமான இடங்களில் உன்னதமான தோரணங்களாலும், பந்தல்களானும், பட்டுவிதானங்களானும், வாழை கமுகு கரும்பு முதலியவைகளானும் வெகு விமரிசையாக அலங்கரிக்கப் பட்டிருந்தது.

திருச்சிக்குப்போயிருந்த கனம்பிள்ளையவர்கள் 4-ந்தேதி திரும்பிவந்ததும், அன்று மாலை சுமார் 4-மணி சுமாருக்கு வஸந்த மண்டபத்திற் கெதிரில் உள்ளூர், வெளியூர் பாடசாலைகளிலுள்ள பிள்ளைகளை வினோதமாய் விளையாடும்படி செய்து அவர்களுள் தேகாப்பியாசத்தில் தேர்ந்தவர்கட்கு சட்டை பெல்டுகளை நல்கியும், சிறுமிசிறுவர்கட்கு பழம், குஞ்சாலாடு, பப்பிரிமெண்டு முதலிய தின்பண்டங்களையளித்தும், மறுதினமாகிய 5-ந்தேதி சோமவாரத்தன்று சிவவிஷ்ணு வாலயங்களில் அபிஷேகார்ச்சனை நைவேத்தியங்களியற்றியும், சூரியாஸ்தமனமானதும் கோபுரமுதலான உன்னத ஸ்தானங்களிலும், தெருக்களில் சிற்சில இடங்களிலும் போலீஸ்டேஷன் போஸ்டாபீசு சப்மாஜிஸ்திரேட் ஆபீசு சப்ரிஜிஸ்தராராபீசு ஆஸ்பத்திரி முதலான இடங்களிலும், வரிசை வரிசையாகத் திருவிளக்குகளேற்றப்பட்டன. திருக்குளத்தில் இரதவடிவமாய்ச்செய்த தீபங்களை ஏற்றினாற்போல நாற்புறத்திலும் தீபங்களை பிம்ப பிரதிபிம்பங்களால் கீழும் மேலும் நவமணிச்சரங்கள் போல் தோன்றும்படிக்கும், நான்கு மூலைகளிலும் விதம் விதமான மத்தாப்பு பிரகாசிக்கும்படிக்கும், மத்தியிலுள்ள நீராழி மண்டபத்தில் தீபாலங்காரங்கள் செய்தும், குளத்தைச் சுற்றியும் உச்சவமூர்த்திகளை திருவாபரணங்களாலும், புஷ்பங்களாலும் அலங்கரித் தெழுந்தருளப்பண்ணியும். அப்பொழுது குளத்தின் வடபுறத்தில் நானாவித பாணவேடிக்கைகளைச் செய்தும், பட்டணத்து ஜனங்களெல்லாருங் கண்டு மகிழ்ந்து வெகு நாளைக்கு முன் நடந்த இத்திருக்குள தீபாலங்காரக்காட்சியைக் கண்டு நேத்திரானந்த மடையவும் செய்துக்களித்தனர். திருக்குள தீபாலங்காரமும் அதன் கீழ்புறமுள்ள மகம்மதியர் பள்ளிவாசல், சின்னமட முதலிய மாடங்களின் தீபாலங்காரமும் கோடி சூரியப்பிரகாசமாய் விளங்கின. இந்த வைபவத்தை இரண்டாயிரம் நாவைப் படைத்த ஆதிசேஷனே வர்ணிக்கவேண்டும். திருக்குளதீபங்களும், ஏரிமத்தியிலுள்ள மூன்றடுக்கு உப்பரிகைகளுடன் கூடிய சஜ்ஜை என்னுமிடத்தில் பொருத்திய தீபங்களும் கோபுரங்களில் பொருத்திய தீபங்களும் சுமார் 5000 - 6000 தீபங்களிருக்கலாம். லக்ஷதீபாலங்கார மென்றே சொன்னாலுந்தகும். ஜமீன் கிராமம் ஒவ்வொன்றிலிருந்தும் இரண்டு குடங்களுக்குக் குறையாமல் தீபாலங்காரங்கட்கு கிராம அதிகாரிகள், தங்கட்கு இராஜாங்கத்தாரிடம் இருக்கும் அன்புக் கறிகுறியாக எண்ணெய் சப்ளை செய்தார்கள்,

வெகு காலமாய் ஈசுவர கைங்கரியத்தைச் சிறப்பாய்ச் செய்யக் காலத்தை ப்ரதீக்ஷித்துக்கொண்டிருந்த நமது ஜமீன்தார் அவர்களாகிய ம-া-া-ஸ்ரீ. பிரசன்ன வேங்கடாசல ரெட்டியார் துரையவர்கள் தேவஸ்தானதர்ம பரிபாலனத்வம் கிடைத்த மகிழ்ச்சியால், தமது பிரதிநிதியாகிய ம-া-া-ஸ்ரீ, அண்ணாமலை பிள்ளையவர்களைக்கொண்டு, நமது சக்கிரவர்த்தியாரின் மகுடாபிஷேக வைபவமாகிற மகோத்சவத்தை எல்லோரும் வியந்துகொண்டாடும்படியாக நடத்தினார்கள். இந்த வை

பவதினத்தன்று திருக்குளத்தில் தெப்போச்சவமே நடத்தியிருக்கலாம்; வருண பகவான் திருக்குளத்தை இந்த வருஷம் நிறப்பாதபடி மோசஞ்செய்தமையால் அவ்வுச்சவம் நடப்பதிற்கில்லாமல் போயிற்று என்ற மனக்குறையும் நமது பிள்ளையவர்களுக்குண்டு.

மேற் கூறிய திருக்குளத்தைப்போலச் சிறந்த வேலைப்பாடுள்ளதாயும், கண்களுக்கு ஓர் காட்சியாயும் உள்ளது எங்கும் கிடையாது. அதைப்போல சிறந்த தடாகத்தை அமைக்க இனியாவராலும் சாத்தியமில்லை. சுமார் 300 வருஷங்கட்கு முன் இந்த ஜமீன் வம்சஸ்தர்களில் ஒருவரான லிங்காரெட்டியார் துரையவர்களால் இந்த புண்ணிய காரியம் செய்து முடிக்கப்பட்டது.

அவருடைய சரித்திரத்தை மிகவும் உருக்கமான நடையில் எழுதப்பட்டிருப்பதை இந்த சஞ்சிகையில் 'தீர்த்தபுரி' என்ற விஷயத்தில் காணலாம். இப்பொழுது திருக்குளத்தைச் சுற்றிலும் உள்ள கருங்கல்தளவரிசை மேடுபள்ளமாகி முனனும் பின்னுமாயிருக்கிறது. கொஞ்சகாலத்தில் அதைக்கவனித்துப் பாராவிடில், மிக்கக்கேவலஸ்திதிக்கு வந்துவிடும். அப்படிப்பட்ட துர்த்தசை அதற்குவாராமலிருக்க நமது யூனியன் சேர்மன் (அக்கிராஸனாதிபதி) அவர்களாகிய ம-௱-௱-ஸ்ரீ S. அண்ணாமலைபிள்ளை அவர்கள் முயன்றாரேயானால் அதுசீர்ப்படுவது மல்லாமல், நமது பிள்ளையவர்கட்கு அழியாத கீர்த்தியானது இப்பூமியுள்ளவரையும் ஓங்கி நிலைபெற்றிருக்கு மென்பதில் யாதொரு ஆக்ஷேபணையுமில்லை. முன் இக்குளத்தை வெட்டியவரும் இந்த ஊர் அரசரின் அமைச்சர்தான். இப்பொழுது அதைநல்ல ஸ்திதிக்குகொண்டு வருபவரும் தத்காலத்திய அமைச்சரென்றே எண்ணுகிறோம். இத்தகைய பொது நன்மையைக்கருதிய கனவான் இப்பொழுது இங்கு வசிப்பதே நமது பாக்கியம். இவரிருப்பதால் ஜமீனுக்கும் க்ஷேமகரம் தான். தேவஸ்தான காரியங்களும் ஜமீன் காரியங்களும ஒழுங்காய் நடந்துவரும் என்பதற்கையமில்லை. ஆனால் ஜமீன்தார் அவர்கள் அவர் எல்லாக்காரியங்களையும் சுயேச்சையாய் இன்னும் விட்டபாடில்லையாம். எவ்விதமெனின்: பெருங்காடுகளை அழித்து சுத்தமாக்க வினைக்கும் ஒருவனை கைகால் ஓடவிடாமல் செய்து வருவதென்னணமோ, அன்னணமே, பிள்ளையவர்களின் நிலைமையிருந்து வருகிறது. கீழ் உத்தியோகஸ்தர்களின் வேலைகளையும் மற்றுமுள்ள ஜமீன் காரியங்களையும் செவ்வனே அறிந்து நடத்தத்திறமையுடன் கூடிய லேட் ஏஜெண்டு பாண்டமங்கலம் இராமசுவாமி அய்யங்கார் அவர்களும் இவ்வாறு தானே அவதிப்பட்டு தன் டாஜா நடவாமல் மனங்கசிந்து சென்றனர். பரிசுத்த மனதையுடைய நமது பிள்ளையவர்களைப் போன்ற பெருந்தகையோர் கிடைப்பது துர்லபம். இது விஷயம் இங்கெடுத்துக் கூறியதின் கருத்து யாதெனில், அருமை வேலைப்பாடுள்ள திருக்குளம் சீர்ப்படுவதற்காகவும் நமது ஜமீன் கௌரவமுற்று சிறப்பாய் இருப்பதற்காக வுந்தான். சிறந்த திருக்குளம் நல்ல ஸ்திதியிலிருந்தால் மேற்கூறிய வைபவக்காட்சி நமக்கு எந்நாளும் கொடுத்துக்கொண்டே யிருக்குமல்லவா? இப்பொழுது நாம் நேத்திரோச்சவமாய்ப் பார்த்துக்களித்தது நமது இந்திய சக்கிரவர்த்தியார் 7-வது எட்வர்டு அவர்களாலல்லவா? அவர் நீடூழி வாழ்வாராக. தர்மந்தழைக்க இராஜ்யமாளுவாராக: சுபம்: சுபம்:

GENERAL NEWS.
சமாசாரக் குறிப்புக்கள்.

மாட்சிமைதங்கிய கவர்னர்ஜெனரலவர்களால் நமது காருணிய சக்கரவர்த்தியின் மகுடாபிஷேகத் தன்று 16188 கைதிகள் விடுதலையாக்கப்பட்டார்கள். அவர்களில் 1,238 பெண்கைதிகள், 4,909 கைதிகள் ஒரு மாசத்திற்கு அல்லது அதற்குக் கீழ்ச்சிறையிலிருக்கத் தண்டிக்கப்பட்டவர்கள், 276 பேர் 6 மாசத்தீர்ப்புப் பெற்றவர்கள்.

மேல்பர்மாவை பிரிட்டிஷ் ராஜ்யத்தோடு சேர்த்த விஷயத்தில் கலகம் பண்ணிக் கூட்டக்கொள்ளையடித்துப் பல விஷேரங்களைச் செய்துவந்ததினால் கைதிகளாக்கப்பட்டவர்களில் 127 பேர் விடுதலையாக்கப்பட்டார்கள்.

கடன்பட்டுக் கொடுக்க நிர்வாகமில்லாத 132 கைதிகள்பட்ட கடன் 8,390 ஆ. இதைக் கவர்ன்மெண்டார் கடன் கொடுத்தவர்களுக்குக் கணக்குத் தீர்த்துப் போட்டு இவர்களை விடுதலையாக்கினார்கள். இவர்கள் 100 ரூக்கு மேற்படாமற் கடன்பட்டவர்களாயு மிருக்கிறார்கள்.

அந்தமான்தீவுக்கு நீர்மேல் ஏற்றப்பட்டவர்களில் ஆணும் பெண்ணுமான 352 கைதிகளும், கூட்டக்கொள்ளையில் சம்பந்தப்பட்ட 31 கைதிகளும் இனித் தாங்கள் குற்றஞ் செய்வதில்லை யென்கிற சில நிபந்தனைகளின்பேரிலும், மற்றுஞ் சில கைதிகளும் விடுதலையாக்கப்பட்டார்கள். ஆக அந்தமான் தீவின் தலைநகரியாகிய போர்ட்பிளெயரில் 400 கைதிகள் விடுதலையாக்கப்பட்டார்கள். இன்னும் அங்குள்ள சிலருக்கு அவர்கள் யோக்கியமாய் நடக்கிற விஷயத்தில் அவர்களுக்கு இடப்பட்ட தண்டனையில் சிலமாசங்கள் குறைக்கப்படுமென்றும் சொல்லியிருக்கிறார்கள்.

முடிசூட்டுக்காக சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜியாகிய ஸர். வி. பாஷியம் ஐயங்காருக்கு ஜீவகாலம் முடிய வருஷத்துக்கு 5,000-ரூபாய் சர்க்கார் கிஸ்தி செலுத்தும்படியான நிலம் "படவிருத்தி இனமாக" கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்னை போலீஸ் இன்ஸ்பெக்டராயிருந்த சீநிவாசராவுக்கும் அவருடைய ஜீவகாலம் வரை வருஷமொன்றுக்கு 1,200-ரூபாய் சர்க்கார் கிஸ்தி செலுத்தக்கூடிய நிலம் "படவிருத்தி இனமாகக்" கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஒரு விசேஷ தர்பார் :—நாளதுமீ 16உ வெள்ளிக்கிழமை டில்லியில் ஹைதராபாத் சமஸ்தானத்து நிஜாமுக்கு G. C. B. பட்டமளிப்பதற்காக ஒரு விசேஷ தர்பார் கூடினது. அப்படி விசேஷ தர்பார் ஒன்றை கூட்டியே நிஜாமுக்கு பட்டமளிக்கவேண்டுமென்று நமது எட்வர்ட் சக்கரவர்த்தி உத்தரவு செய்திருக்கிறார்களாம்.

அணிவகுப்புச் சோதனை :—டில்லி தர்பார் கொண்டாட்டத்தின் ஒரு முக்கிய அமிசமாய் நடத்தப்பட்ட அணிவகுப்புச்சோதனை நாளதுமீ 15உ வியாழக்கிழமை யன்று நடத்தப்பட்டது. அச்சமயம் படைவீரர்கள் வெகுவிமரிசையாய் அணிவகுத்து நின்ற காட்சியைப் பார்த்தோர் அனைவருக்கும் ஆநந்தமுண்டாயிருக்கவேண்டும்.

உயர்ந்த கௌரவப் பட்டங்கள் :—லார்டு கர்ஸனால் டில்லியிலுள்ள திவானியம் என்ற மாளிகையில் அளிக்கப்பட்ட கம்பானியன்கள், நைட்டுகள், கிராண்டு

கம்மாண்டர்கள் போன்ற உயர்ந்த பட்டங்களைப் பெற்றவர்களுள் நமது கொச்சி ராஜாதான் முதலாவதாகப் பட்ட மளித்து மரியாதை செய்யப்பட்டார். அவருக்கு G. C. S. I. பட்டம் அளிக்கப்பட்டது. அப்போது 150 கம்பானியன்களும் 30 நைட்களும் 25 கிராண்டு கம்மாண்டர்களும் நமது இராஜப்பிரதிநிதியிடம் தங்கள் தங்கள் பட்டங்களைச் சகலவித மரியாதைகளுடனும் பெற்றார்கள். நமது திருவாங்கூர் மகாராஜா G. C. I. E. பட்டம் பெற்றார்.

முடிசூட்டுப் பதக்கங்கள் :—டில்லியில் நடந்த முடிசூட்டுத்தர்பார் ஞாபகார்த்தமாய்ப் பொற்பதக்கங்கள் அடிக்கப்பட்டு வருகின்றன. அவைகள் யோக்கியதையுடையவர்களுக்குத்தான் கொடுக்கப்படும். அவைகளைப் பெற உரியவர்கள் இன்னாரென்று தெரிந்துகொள்ள இப்போது ஜாப்தா தயாரிக்கப்பட்டு வருகின்றது. தர்பாருக்குச் சென்றிருந்த தேசமன்னர்களுக்கும், சில அந்நியநாட்டுப் பிரதிநிதிகளுக்கும், சில உயர்பதவி உத்தியோகஸ்தர்களுக்கும் அப்பதக்கங்கள் வழங்கப்படும். அப்பொற் பதக்கங்களையன்றி சிலருக்கு வெள்ளிப்பதக்கங்களும் அளிக்கப்படப்போகின்றன. ஒரு சுமார் 2000 பேருக்கு வெள்ளிப்பதக்கங்கள் அளிக்கப்படலாம்.

லண்டன் பத்திரிகைகளும் டில்லி தர்பாரும் :—தர்பாரைக் குறித்து நம் இந்து தேசப் பத்திரிகைகளிற்பல வெவ்வேறுவிதமாய் அபிப்பிராயப்படுகின்றன. இங்கிலாண்டிற் பிரசுரமாகு மனேக பத்திரிகைகள் வெகுவாய்ச் சிலாகித்துப் பேசுவனவாயினும் ஒன்றுமாத்திரம் அதற்கிடங் கொடுக்கவில்லையென்று தெரியவருகிறது. அப்பத்திரிகைக்கு 'டெயிலி கிரானிகல்' என்று பெயர். அது லண்டனிற் பிரசுரமாவது. இதர பத்திரிகைகளைக் காட்டிலும் இந்த டெயிலி கிரானிகல் பத்திரிகை நம் இந்தியாவின் நடவடிக்கைகளை நன்குணர்ந்து நம்மவரது அபிப்பிராயத்திற்கிணங்க மேற்படி டில்லி தர்பாரைச் சேர்ந்தவை யாவத்தும் சுத்த ஆடம்பரமெனவும், குதூஹலத்துடன் கொண்டாடிய தர்பார் வீண்வம்புச் செலவெனவும் பிரிடிஷ் ஆட்சியின் மதிப்பு அதிகரிக்கவேண்டுமாயின் இந்தியா தேசத்தின் பொருளாதார நிலையை விருத்திசெய்வதற்கே பிரிடிஷார் உழைக்கவேண்டும் எனவும் கூறுகின்றது. இந்துதேசத்தவரின் ஸ்திதியை நன்றாய் அப்பத்திரிகை அறிந்துளது என்பதற் கின்னுமொரு திருஷ்டாந்தமுளது. நம்மவருட் பலர் உடுக்கத் துணியின்றியும் படுக்கப்பாயின்றியும் பசியினால் பீடிக்கப்பட்டுப் பஞ்சத்தின் வடி படுகின்றன ராதலின், வரிப்பளுவைத் தாங்கமுடியாது வருத்தமுறுகின்றனர். இவைகளைக் கர்ஸன் பிரபு அறிந்திருப்பதனால் இந்தியாவின் பொருளாதார நிலையை யபிவிருத்தி செய்வது மிக்க அவசியமென்று அவர் மனதிற்குத் தோன்றியிருக்கக் கூடும் என்பதுதான்.

முடிசூட்டு அனுகூலம்:—நமது எட்வேர்டு மகாராஜா இந்திய சக்கிரவர்த்தியாக முடிசூட்டிக்கொண்ட அறிகுறியாக இந்திய பிரஜைகளுக்குப் பொதுப்பட யாதொரு அனுகூலமும் செய்யப்படவில்லை. நமது இராஜப்பிரதிநிதி தர்பாரில் பேசியபோது, இனி யொருவேளை ஜனங்களுக்கு வரி முதலியது குறைக்கப்படலாமென்றும், இப்போது சர்க்கார் வருஷம் நடுபாதியா யிருக்கிறபடியால் அதைக்குறித்துச் சொல்ல முடியாதென்றும் சொன்னார். நமது கவர்ன்மெண்டார் தமது குடிகளுக்கு இந்தப் பெருநாளில் ஒன்றும் செய்யாவிடினும், நமது சுதேச மன்னர்களி லொருவரான ராம்பூர் நவாப் எட்வர்டு சக்கரவர்த்தியின் மகுடாபிஷேக ஞாபகார்த்தமாகத் தமது குடிகள் பாக்கியாயிருந்த வரியில் $1\frac{3}{4}$-லக்ஷம் ரூபாயை மன்னித்துவிட்டார். இது புகழத் தக்கதே.

NOTICE.

Although there are several journals world-wide, yet we request the learned public to lend a helping hand towards the advancement of this journal also.

அறிவிப்பு.

உலகிலுள்ள ஜனங்கள் புருஷார்த்தங்களை அறிந்தனுபவித்தற்கு, பத்திரிகைகள், தருமாதிகளை அன்னோருக்கு ஞாபகப்படுத்திக்கொண்டு சஞ்சரிப்பவைகள் பல உளவாயினும், வித்வான்கள் பாஷையும் நல்லொழுக்கமும் அபிவிருத்தியடைவதில் நோக்கமுடையவர்களாகலின், இந்நூதனத்தமிழ்ப் பத்திரிகையையும் ஆதரிப்பதற்குக் கடமைப்பட்டிருத்தலால், அத்தகைய கல்விமான்கள் இடையில் தளர்ச்சியடையாவண்ணம் பாதுகாத்து உதவி செய்வார்களென நம்புகிறோம்.

---

1. திரவிடமா பாடியத்தாராதி முனிபுங்கவர்கள்
பரவாவடுதுறை வாழ்பண்பார்—குருமரபுக்
சோர்தீபமாகி யொளிறம்பலவாணப்
பேரானடி யெமக்குப்பேறு.

2. ஆதலினீ யன்னோனடிக்கமலஞ் சென்றிறைஞ்சப்
போதுதியேலஞ்சுகுணசுந்தரதா—வாதவருட்
குன்றன்னோ சிதரக்கொண்டிக்கு வலயத்திற்
சென்றிருமாந்தே திரியலாம்.

ஆற்றுப்படை.

1. வேற்கரசே யென்ன விபுதர்தமைக்காத்தருளும்
பாற்கர சேதுபதித்துரையைப்—போற்றுதியேல்
இன்புற்றுவாழ் சுகுணசுந்தர விம்மேதினியில்
யன்புற்றுச் சூழ்ந்துவரலாம்.

வேண்டுகோள்.

2. ஏதுபதிச்செல்வா மென்றெண்ணிபிடருழுக்கு
மாதுலர்போலுஞ் சுகுண சுந்தரநின்—சீத
மதிக்குடைக்கீழ் தங்கமதுர மொழிச்சேது
பதிப்பாற் கரதுரை கண்பார்.

ஆர்றுப்படை.

3. அறுசுவைபோலென்று மவனியுளோராயப்
பெறு சுகுணசுந்தர நீபெட்பி—னுறுதற்
குரைத்தேவர் பாலெனுலகு புகழ்பாண்டித்
துரைத்தேவர் பாலடைந்து சொல்.

ADVERTISEMENTS : Favourable Rates.—Yearly Rs. 100 per page. For ½ a page Rs. 50. English advertisements at As. 6 per line. For other details apply to the Managing Proprietor, "Suguna Sundaram" Office, Turaiyur, Musiri Taluk.

TO OUR SUBSCRIBERS.

The Manager requests those who have not as yet sent in their Subscription, to be pleased to intimate to him their desire of being enlisted by the year or otherwise through a post card and kindly remit the Subscription, within a fortnight from the date of receipt of this issue. In the event of failure to receive the said information or the Subscription the Manager will be necessitated to despatch the next issue by V. P. Post.

நமது சந்தாதாரர்களுக்கு

அறிவிப்பு.

நமது கையொப்பக்காரர்களில் அநேகர் தங்கள் சந்தாத்தொகைகளைச்செலுத்தியும், செலுத்திக்கொண்டுமிருக்கிறார்கள். செலுத்தாத ஏனையோர் தங்களைச்சந்தாதாரர்களாக ரிஜிஸ்தர் செய்துகொள்ளவேண்டியதற்கும், அல்லது தங்கள் விருப்பத்திற்கிணங்க எவ்விதஞ் செய்யவேண்டுமோ அதற்கும் காலணாகடிதமூலமாய் எம்மீது அன்புகூர்ந்து தெரிவிக்கவேண்டுமாயும், அப்படிப்பத்திரிகை பெற விரும்புவோர் தங்கள் சந்தாத்தொகையை இன்னும் பதினைந்து தினத்திற்குள் தயவுசெய்து அனுப்பவேண்டுமாயும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கூறியபடி காலணா கார்டாவது சந்தாத்தொகையாவது அனுப்பாத பத்திரிகாநேயர்களுக்கு அடுத்த சஞ்சிகையை வி. பி. தபால்மூலமாக அனுப்பப்படும்.

TO OUR CONTRIBUTORS.

The Editor will thankfully receive all suggestions towards the improvement of the journal.

Suguna Sundaram Office,
Turaiyur.

விஷயமெழுதும் நேயர்கட்கு.

இப்பத்திரிகை விருத்திக்கு வரும்பொருட்டு அப்போதைக்கப்போது தெரிவிக்குஞ் சமாசாரங்களை வந்தனங்களுடன் அங்கீகரிக்கப்படும்.

சுகுணசுந்தரம் ஆபீசு,
துறையூர்.

T. S. S.